Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 321 | திங்கட்கிழமை | ஐப்பசி 01 ஆம் நாள் 18 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.18

வடக்கு கடற் பகுதிகளில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கண்டித்து நேற்று வடக்குக் கடலில் போராட்டம் நடத்தப்பட்டது. முல்லைத்தீவு, கள்ளப்பாடு கடற்கரையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட படகுகளின் ஊர்வலம், பருத்தித்துறை துறைமுகத்தை மு.ப. 9.30 மணியளவில் வந்தடைந்தது. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையைத் தடுக்க 13



## கொரோனா தொற்றால் 12 பேர் சாவு!

கொழும்பு, ஒக்.18

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று அறிவித்தது. இந்த உயிரிழப்புகள் நேற்று 06

## விபத்தில் சிறுவன் உயிரிழப்பு

வவுனியா, ஒக்.18

வவுனியா, உலுக்குளத்தில் நேற்று மாலை நடந்த விபத்தில் 16 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந் 13

# சர்வதேசத்தை நம்பினால் தமிழர் தீர்வு தள்ளிப்போகும்

### இந்த வருடம் புதிய அரசமைப்பு இல்லை
### அமைச்சர் கெஹெலிய கைவிரிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 18

ஜனாதிபதியின் வாக்குறுதியின்படி அடுத்த வருடத்துக்குள் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறுவது போல் இந்த வருட இறுதிக்குள் புதிய அரசமைப்பைக் கொண்டுவர முடியாது. 13



## இந்தியாவுக்கு எதிராக போராடுவது அபத்தம்

*மறவன்புலவு சச்சி அறிக்கை*

யாழ்ப்பாணம், ஒக்.18

தமிழக மீனவர்கள் வடகடலில் எல்லைக் கோடுகளைத் தாண்டி வருகிறார்கள் என்பது உலகில் இல்லாத வியப்பு நிகழ்வா? எதிராகப் போராட்டம் செய்து கொண்டு எந்த முகத்தோடு 13

## இந்திய மீனவருக்கு எதிராக போராட்டம் நடத்தவில்லை

*சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஒக்.18

வடக்குக் கடலில் நடத்தப்பட்ட போராட்டம் இந்தியா மற்றும் தமிழ் நாடு அரசுகளுக்கு எதிரானதோ அல்லது இந்திய மீனவர்களுக்கு எதிரானதோ அல்ல என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் 13

## குருநகர் மீனவர்களுக்கு எதிராகப் போராட்டமா?

*மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தேகம்*

யாழ்ப்பாணம், ஒக்.18

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் அழைப்பு விடுக்கப்பட்டு, நடத்தப்பட்ட போராட்டத்துக்கு, குருநகர் மீனவர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். நடத்தப்பட்ட போராட்டம் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதி 13



முச்சந்தி முரளி

"இன்னும் எத்தினை வருசம்தான் இப்படி அடுத்த வருசம் வந்திடும் எண்டு சொல்லி பேய்க்காட்டப் போகினமோ?"

## கோத்தாபயவின் ஆட்சியில் தலைவிரித்தாடும் வறுமை!

*சாடுகிறது ஐக்கிய மக்கள் சக்தி*

கொழும்பு, ஒக்.18

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, ஆட்சியைப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளில் நாட்டில் வறுமை நிலை 11.7 வீதமாக அதிகரித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு 06



## இரண்டு மாதச் சிசு திடீரென உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.18

இரண்டு மாத ஆண் சிசு ஒன்று உறக்கத்திலேயே உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை, அராலி தெற்கில் நடந்துள்ளது. நேற்று அதிகாலை 3 மணியளவில் தாய்ப்பால் கொடுத்த பின்னர், 3.30 மணியள 06

## விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு கோரி இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.18

வடக்கு‡ கிழக்கு மாகாணங்களில் விவசாயிகள் உட்பட நாட்டில் உள்ள விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக் கோரி வடக்கில் இன்று போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 28 கமநல சேவைகள் நிலையங்களுக்கும் முன்பாக இன்று 13

## சம்பள முரண்பாட்டை நீக்கி பாடசாலையை ஆரம்பிக்குக

*வடமாகாண அதிபர் சங்கம் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஒக்.18

அதிபர்கள், ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி 90 நாள்களுக்கு மேலாக போராட்டம் நடத்திவரும் நிலையில், அதற்குரிய தீர்வை வழங்காது அரசு பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு நடவ 13

## மஹிந்தானந்தவுக்கு எதிராகத் தீர்மானம்!

கொழும்பு, ஒக்.18

உரிய நேரத்தில் உரத்தைப் பெற்றுக் கொடுக்காது விவசாயிகளின் நம்பிக்கையை மீறிய விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று நாடாளுமன்ற 06




அவசரப் பணத் தேவைக்கு உதவும் நம்பகமான உறவினர்

அரச வங்கியின் பாதுகாப்போடு உங்கள் வசதிக்கமைய மீள செலுத்தக்கூடிய "இலங்கை வங்கியின்" ரண் சுரெக்கும் கடன் சேவை மூலம் உங்களுக்கு...

- தங்கப் பவுணொன்றுக்கு 75,000 ரூபாய் வரையிலான அதிகபட்ச முற்பணம்
- 100 ரூபாய்க்கு குறைந்தபட்ச மாதாந்த வட்டி 75 சதம்

ரண் சுரெக்கும் கடன்சேவை

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# அவப்பெயருக்கு அஞ்சி பரிந்துரைகள் கிடப்பில்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.18**
**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை நடைமுறைப்படுத்தினால் தனக்கு அவப்பெயர் ஏற்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் என கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்களுடன் இணையம் மூலம் நடந்த கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் வென்றவுடன் என்னை அழைத்து உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைக்குழு அமைக்கப்படும் என்றும், அதன் பரிந்துரைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

ஆனால், விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்து இரு நாள்களின் பின்னர், அதிலுள்ள பரிந்துரைகள் சிலவற்றை நடைமுறைப்படுத்தினால் தனக்கு அவப்பெயர் ஏற்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தீவிரவாதத்தை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. அந்தத் தாக்குதல்களின் பின்னணியில் ஏதோவொரு பெரிய சக்தி இருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் அடிப்படையைக் கண்டறிவதற்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும். அரசியல் இலாபங்களை அடைய வேண்டும் என்பதற்காக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை வழிநடத்தியோர் யார் என்பது கண்டறியப்பட வேண்டும். - என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# மாகியப்பிட்டி - சண்டிலிப்பாய் எல்லை வீதி சீரமைப்பு ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக்.18

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் வடக்கு கிராமங்களின் எல்லை வீதிச் சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சீரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த வீதியைத் தார் வீதியாக மாற்ற வேண்டும் என்று அந்தப் பகுதிப் பொதுமக்களும், விவசாயிகளும் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

400 மீற்றர் நீளமான இந்த வீதி, அந்த வட்டார உறுப்பினர் அனுசனின் முயற்சியால் பிரதேச சபையின் 22 இலட்சம் ரூபா நிதியில் தார் வீதியாக மாற்றப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த ஆரம்ப நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன், சண்டிலிப்பாய் வடக்கு, மாகியப்பிட்டி வட்டாரத்துக்கான பிரதேச சபை உறுப்பினர்கள் அனுசன், றமணன், பண்டத்தரிப்பு பிரதேச சபை உறுப்பினர் ஜிப்ரிக்கோ, அயல்கிராம பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-319)

# அரிசி விலை அதிகரிக்கலாம்!

கொழும்பு, ஒக்.18

இரு வாரங்களில் அனைத்து அரிசி வகைகளின் விலைகளிலும் அதிகரிப்பு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் இன்று தெரிவித்துள்ளது.

பொலனறுவையில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

அனைத்து வகை அரிசிகளினதும் ஒரு கிலோவுக்கான விலை 25 ரூபாவில் இருந்து 50 ரூபாவரை அதிகரிக்கவுள்ளது. அனைத்து நிர்ணய விலைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் தற்போது நிலவும் உரப்பற்றாக்குறையால் நெல் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் 50 வீதத்தால் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர். (எ-இ)

# மாடு கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கொடிகாமத்தில் கைது



கொடிகாமம், ஒக்.18

மாடுகளைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸாரால் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த இருவர் பட்டா ரக வாகனத்தில் நான்கு மாடுகளை ஏற்றிச் சென்றுள்ளனர். மாடுகளை ஓமந்தை பால் பண்ணைக்கு விற்பனை செய்வதற்காக அவர்கள் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொடிகாமம் சந்தியில் பொலிஸார் வாகனத்தைச் சோதனையிட்ட போது, உரிய அனுமதிப் பத்திரம் இன்றி அவர்கள் மாடுகளை ஏற்றிச் சென்றமை கண்டறியப்பட்டது. அதையடுத்து இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் இருவரும் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

# புதிய கொரோனாத் திரிபு நாட்டுக்குள் நுழையலாம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



கொழும்பு, ஒக்.18

புதிய கொரோனாத் திரிபுகள் நாட்டுக்குள் நுழைவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு திறக்கப்படுவதாலும், துறைமுகங்கள் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதாலும், புதிய வகை கொரோனாத் திரிபுகள் நாட்டுக்குள் நுழையும் அபாயம் உள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-இ)

# எரிபொருள் விலை உயர்வை தடுப்பதற்காக பிரயத்தனம்!

*பஸில் கள்ள மௌனம் என்கிறார் வலுசக்தி அமைச்சர் கம்மன்பில*

**கொழும்பு, ஒக்.18**

**அடுத்த இரு வாரங்களுக்கு எரிபொருள் விலை அதிகரிக்காது. இந்த ஆண்டுக்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக ஓமான் அரசிடம் கடன் உதவி கோரப்பட்டுள்ளது. அதே போன்று நிதி அமைச்சின் மூலமாகவும் இதற்கான நிவாரணங்களை எதிர்பார்க்கின்றோம்.**

இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து பேசுபொருளாக மாறியுள்ளது. எரிபொருள் விலையை அதிகரிக்கக்கூடாது என்பதே எனது நிலைப்பாடு. ஆனால் நிதி அமைச்சர் இது குறித்து மௌனம் காக்கின்றார். அமைச்சரவையில் இது தொடர்பாகப் பேசியபோதும் அவர் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. அதனால் ஓமானிடம் கடன் கேட்டுள்ளோம். ஒரு வருடத்துக்கான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு இந்தக் கடன் கேட்கப்பட்டுள்ளது, ஐந்து ஆண்டுகளுக்கு நிவாரணமும், அதன் பின்னர் 20ஆண்டுகளில் கடன்களைச் செலுத்தி முடிப்பதைப் போன்றும் ஒரு பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அது இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை. அந்த கடன் கிடைத்தால் எரிபொருள் விலை அதிகரிக்காது.

ஓமான் அரசின் கடன் கிடைக்காதுபோனாலோ, அல்லது திறைசேரியில் நிவாரணம் கிடைக்காது போனாலோ வேறு சில முயற்சிகளை முன்னெடுப்போம். அதிலும் தோல்வி கண்டால் எரிபொருளின் விலை அதிகரிக்கும். இன்னும் இரண்டு வாரங்களுக்கு எரி பொருள் விலை அதிகரிக்காது. இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். இந்தியா மிகப் பெரிய பலம்பொருந்திய நாடு. அவர்களுடன் போர் செய்து எம்மால் எமது வளங்களை ஆக்கிரமிக்க முடியாது. இராஜதந்திர ரீதியிலேயே இவற்றை எம்மால் கைப்பற்ற முடியும்- என்றார். (எ-இ)

## இலங்கை இராணுவப் பயிற்சியை இந்திய அரசு கைவிடவேண்டும்

*தமிழக வாழ்வுரிமைக் கட்சி கோரிக்கை*

கொழும்பு, ஒக். 18

“இலங்கை இராணுவத்துடன் கூட்டுப்பயிற்சி மேற்கொள்வதை இந்திய இராணுவம் கைவிட வேண்டும்” என்று தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய இராணுவத் தளபதி எம்.எம்.நரவனே, கடந்த 13ஆம் திகதி இலங்கைக்கு 4 நாள்கள் அரசுமுறை பயணம் செய்துள்ளார். இதன்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச, இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார். இரண்டு நாட்டு உறவு குறித்தும், கடல் பாதுகாப்பு குறித்தும் இராணுவப் போர் இணை பயிற்சி குறித்தும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

ஆண்டுதோறும் இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஆயிரம் பேருக்கு, இந்தியாவில் பயிற்சி அளிக்கவும், கூடுதலாக 50 இராணுவ அதிகாரிகளுக்குச் சிறப்பான பயிற்சி அளிக்கவும் பேச்சின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசின் இத்தகைய் நடவடிக்கையை தமிழக வாழ்வுரிமைக் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. 2009இல், சிங்களப் பேரினவாத அரசால் அரங்கேற்றப்பட்ட தமிழின அழிப்பு போரில் சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குழந்தைகள் என்றும் பாராமல் இராணுவ வாகனத்தால் ஏற்றிக் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானர்கள். இப்படியான துயரங்கள் அரங்கேறி 12 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், தமிழர்களுக்கான நீதி இன்றுவரை கிடைக்கவில்லை - என்று வேல்முருகன் குறிப்பிட்டுள்ளார். (து-இ)

## தேரர் உட்பட பொதுமக்கள் ரிஷாத்துக்கு வரவேற்பளிப்பு

கொழும்பு, ஒக். 18

174 நாள்களுக்குப் பின்னர் பிணையில் விடுதலையான ரிஷாத் பதியுதீனுக்கு பௌத்த தேரர் உட்பட பெருமளவான மக்கள் வரவேற்பளித்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில், பயங்கரவாத் தடைச் சட்டத்தின் கீழ், கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, சுமார் 174 நாள்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கடந்த 14ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் நீண்ட நாள்களுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் புத்தளத்துக்குச் சென்றார். இதன்போது பதியுதீனை அவரது ஆதரவாளர்களும், பொதுமக்களும், அரசியல் பிரமுகர்களும் ஆனந்தக் கண்ணீருடன் வரவேற்று மகிழ்ச்சி அடைந்தனர்.

இதன்போது ரிஷாத் பதியுதீனின் புத்தளம் இல்லத்துக்கு வருகைதந்த குருநாகல் மகாநாயக்க தேரர், ரிஷாத் பதியுதீனின் நலன்கள் குறித்து விசாரித்தார். அவருக்கு ஆசியும் வழங்கிச் சென்றார். (து-இ)

## இந்தியாவிலிருந்து திரவ உரம்

கொழும்பு, ஒக்.18

உயர்தர நைட்ரஜன் திரவ உரங்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இந்த மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். நெல் அதிகளவில் பயிரிடப்படும் அம்பாறை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு முதலில் இந்த நைட்ரஜன் திரவ உரங்கள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, அம்பாறை மாவட்டத்துக்குத் தேவையான மூன்று வகையான உரம், கரிம திரவ உரம் மற்றும் பொட்டாசியம் குளோரைட் ஆகியவை ஏற்கனவே அம்பாறை விவசாய மேம்பாட்டு மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)




**எப்ப பாத்தாலும் உள்ளூராட்சி மன்றங்களில நடக்கிற கூத்துக்களைத்தான் பட்சி சொல்லுது எண்டு உங்களுக்கும் சலிப்பாய் இருக்கும். ஆனா என்ன செய்றது? அங்கதானே கனக்க விசயங்கள் நடக்குது. பட்சியின்ர காதுக்கு எட்டி அது சரியா எண்டு உறுதிப்படுத்தி சொல்லுறது கொஞ்சம்தான். இண்டைக்கும் யாழ்ப்பாணத்தில ஒரு உள்ளூராட்சி சபையில நடந்த கூத்தைத்தான் பட்சி சொல்லப்போகுது.**

**வலிகாமத்தில உள்ள ஒரு சபைக்கான தவிசாளர் தெரிவு பெரும் பிரகண்டமாகி கடைசியில லொத்தர் போட்டுத்தான் ஆரெண்டு முடிவுசெய்தவை. மூண்டு வருசத்துக்கு முந்தி நடந்திருந்தாலும் அது உங்களுக்கு நினைவிருக்கும்.**

**அந்த சபையின்ர தவிசாளராக முதல் இருந்தவருக்கு அடுத்தமுறை தவிசாளராக வரவிடாமல் புதுசா வந்தவருக்கு தவிசாளர் பதவி குடுபட்டது. தன்னைத் தவிசாளர் பதவிக்கு விடேல்ல எண்ட கோபத்தில அந்தப் பிரகாசமானவர் மற்றக் கட்சிகளோட கூட்டுச் சேர்ந்து தன்ர கட்சியையே கவுக்கப்பாத்து பிறகுதானே கவிண்டவர். அந்தக் கோபத்தில கட்சியின்ர சட்டாம்பியர் பிரகாசமானவர கட்சியில இருந்து தூக்கிட்டார். உடனயே பிரகாசமானவர் அதுக்க எதிராய் வழக்குப் போட்டார். அந்த வழக்கில வெல்லேலாது எண்டு சட்டாம்பியாருக்கு விளங்கிட்டுது. உடனேயே பிரகாசமானவருக்கு மாகாணசபை சீட் தரலாம் எண்டு சட்டாம்பியார் சரண்டர் ஆகிட்டார். பிறகென்ன சட்டாம்பியாரின் ‘மெயின் செம்பாக’ பிரகாசமானவர் தாளம் போடத் தொடங்கிட்டார். இப்ப கதை அதில்ல. இப்பிடியெல்லாம் கஷ்டப்பட்டு புதுசா தவிசாளராக வந்தவர் செய்யிற திருகுதாளம் பற்றித்தான்.**

**இந்தத் தவிசாளரின்ர திருக்கூத்து ஒண்டு சம்பந்தமாய் கெதியில விசாரணை நடக்கப்போறதாய் கேள்வி. சபைக்கு பக்கத்தில இருக்கிற பழைய பெயர்போன சந்தைக் கட்டடத்தை இடிச்சு புதுக் கட்டடம் கட்டினவை. பழைய கட்டடத்தை இடிக்கேக்க அதில எடுத்த சிலாகைகள், மரங்கள், அதுகள் இதுகள் எண்டு கிடைச்ச சாமான்கள இந்தத் தவிசாளர் தன்ர வீட்டுக்கு ஏத்திக் கொண்டுபோய் பறிக்கச் சொல்லியிருக்கிறார். தவிசாளர் சொல்லைத் தட்டேலுமோ? அவர் சொன்ன மாதிரியே ஊழியர்களும் கொண்டுபோய் பறிச்சிட்டினம். ஆனா அங்கதான் ஒரு சிக்கல் நடந்திருக்கு. கந்தசாமி படத்தில வடிவேலு ஓவர் நைட்டில ஒபாமா ஆகிறன் எண்டு பிளான் போட்டதையும் எழுதின மாதிரி, இந்த சாமான்களை எடுத்துக் கொண்டே தன்ர வீட்டை இறக்குறதுக்கு சபையின்ர வாகனங்களைப் பாவிச்சிருக்கிறாராம். சபையில வேலைசெய்யிற ஆக்களும் தங்கட ரன்னிங் சாட்டில (எங்கயெங்க வாகனம் ஓடினது எண்டு சொல்லிற ஒரு பதிவேடு) தவிசாளர் வீட்டை மரங்கள் இறக்கின கதையையும் வடிவா எழுதிட்டினமாம். அதுதான் இப்ப தவிசாளருக்கு எதிராக ஆதாரமாக மாறி ஆப்பு வைச்சிருக்கு. இது இப்ப மாவட்ட மட்டத்தில விசாரணைக்கு போயிருக்கிறதா தகவல். கெதியில விசாரணைக் குழு போட்டு விசாரிபடும் எண்டு சொல்லப்படுகுது. அப்பிடி விசாரணை நடந்து குற்றம் உறுதியானால் அவரின்ட பதவி ஆளுநரால பறிபோக வாய்ப்பிருக்கு எண்டு சட்டவட்டாரங்கள் சொல்லுது. பார்ப்பம்....**



- பட்சி

## முல்லைத்தீவு - திருமுறிகண்டி வீதிப்பணிகளை விரைவுபடுத்துக

முல்லைத்தீவு, ஒக்.18

முல்லைத்தீவு - திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வீதி வேலைகளை விரைவுபடுத்துமாறு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினரும் முன்னாள் தவிசாளருமான செ.பிறேமகாந் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது வட்டாரத்திலுள்ள திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஐறோட் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தபாலக வீதியின் 500 மீற்றர் தவிர்ந்த மிகுதிப் பகுதியின் அதியுயர் மின்கம்பிகளின் கீழாக செல்வதால் அவை உள்ளடக்கப்படவில்லை. எனினும் இந்த வீதியின் மிகுதிக்குப் பதிலாக நியூட்டன் வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.


இந்த நிலையில் குறித்த திட்டங்கள் எவையும் இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படாது உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எனவே மழை காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் குறித்த வீதிகளின் நிலை மிக மோசமானதாகக் காணப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்-என்று பிரேரணையை மக்கள் சார்பில் முன்வைத்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக நடைபெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபையிலும் இந்தப்பிரேரணை முன்வைக்கப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-13)

# விவசாய நடவடிக்கைக்கு 3 லட்சம் ரூபா உதவி

### விவசாய அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 18**

**அரை ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட 3 இலட்சம் ரூபா உதவித் திட்டம் ஒன்றை வழங்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

விவசாய பொருள்களை விவசாயிகளுக்கு வழங்கும் நிகழ்வு கம்பளை பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுற்றுச்சூழலுக்கு ஏற்ற விவசாய நடவடிக்கைகளுக்காக நெனோ நைட்ரஜன் மூலத்துடன் கூடிய 22 இலட்சம் லீற்றர் விஷேட திரவ உரத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த உரத் தொகையின் முதல் தொகுதி எதிர்வரும் 19 ஆம் திகதி நாட்டுக்கு எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-இ)



### அடுத்த பருவகாலத்தில்

## ஒரு கிலோ நெல் ரூ.70 கொள்வனவு

கொழும்பு, ஒக். 18

அடுத்த பருவகாலத்தில் ஒரு கிலோ நெல்லை 70 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார் -என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே; அவர் இவ்வாறு தெரிவித்தார். . (ம)



இலங்கை இராணுவத்தின் 72 ஆவது வருட நிறைவை முன்னிட்டு 52 ஆவது காலாட் படைப்பிரிவின் கீழ் காணப்படுகின்ற பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 குடும்பங்களுக்காக உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வானது 52 ஆவது காலாட் படைப்பிரிவினுடைய சேனாதிபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவின் தலைமையில் நேற்று இடம்பெற்றது. (ம)

## தென்மராட்சியில் 60 வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி,ஒக்.18

தென்மராட்சிப் பிரதேசத்தில் 60 கிராம அலுவலர் பிரிவுகளில், தலா ஒரு வீதி சிமெந்துக் கலவை (கொங்கிறீற்) வீதிகளாகப் புனரமைக்கப்படவுள்ளன.

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வீதிகளும், பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 49 வீதிகளும், சிமெந்துக் கலவை வீதிகளாக மாற்றப்படவுள்ளன. ஒவ்வொரு வீதிக்கும் தலா 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

## ஏழு மூளை உள்ளவரென கூறப்பட்ட பஸில் எங்கே?

### கிண்டலடிக்கின்றார் சஜித்



கொழும்பு, ஒக். 18

பொருளாதாரத்தில் அதிசயங்களைச் செய்யக்கூடிய ஏழு மூளைகளைக் கொண்ட ஒருவர் இருக்கின்றார் எனப் பெருமை பேசிய அரசு, முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது மக்களை ஒடுக்குகின்றது. பொருளாதார நெருக்கடியில் மக்கள் உள்ளனர்.

அந்த 7 மூளைகளைக்கொண்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இப்போது எங்கே?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

“மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசு எந்தவிதக் கவனத்தையும் செலுத்தவில்லை. நாட்டில் நண்பர்கள் கும்பல் மற்றும் பெருமளவிலான மாபியாக்கள் செயற்படுகின்றன. அரசு நாளுக்கு நாள் மக்களை ஒடுக்கிக் கொண்டே செல்லுகின்றது.

அரசியல் உரிமைகள் மற்றும் கலாசார உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. மக்களுக்கு அசௌகரியத்தையும் வறுமையால் வாட்டுவதையுமே அரசு இன்று செய்கின்றது - என்றார். (து-22)

## கொடிகாமம் நகர்ப் பகுதியில் மோட்டார்சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 18

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் நகர்ப்பகுதியில் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

## வெளிநாட்டில் வேலை தருவதாகக்கூறி இளையோரிடம் பணம் பறிக்கும் முகவர்

கொழும்பு, ஒக். 18

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி இலங்கை இளைஞர், யுவதிகளிடம் பணம் கொள்ளையடிக்கும் முகவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலா விசா மூலம் டுபாய் நாட்டுக்கு தொழிலுக்காக இளைஞர் யுவதிகளை அனுப்புவதாக வாக்குறுதியளிக்கப்பட்டு இந்த மோசடி மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு டுபாய் நாட்டுக்குச் செல்லும் இளைஞர்கள், யுவதிகள் தொழில் வாய்ப்பு கிடைக்காமல் இடை நடுவில் சிக்கி தவிக்கின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.


டுபாயில் தொழில் பெற்றுத்தருவதாக 3 லட்சம் ரூபா பெற்றுக்கொண்டு அந்த நாட்டுக்கு இளைஞர்களை அனுப்புவதற்கு முகவர் நிலைய உரிமையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். எனினும், டுபாயில் அவர் கூறியது போன்று தொழில் கிடைப்பதில்லை என தெரியவந்துள்ளது.

இவ்வாறான மோசடியில் சிக்கியவர்கள் முகவரிடம் கேள்வி கேட்கும்போது உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் இந்த மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்தபோதும் அவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். (து-இ)

## எம்.பி. பதவிக்கு பாதிப்பில்லை

### அத்துரலிய ரத்னதேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 18

தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அபே ஜன பல கட்சியின் உறுப்புரிமையிலிருந்து ரத்ன தேரரை நீக்கியதாக அந்தக் கட்சி அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது.

எனினும், கட்சியால் எடுக்கப்பட்ட எந்தவொரு தீர்மானமும் தம்மை எந்த விதத்திலும் பாதிக்கப்போவதில்லை என ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (து-இ)

# 21ஆம் திகதிக்குள் தீர்வில்லையேல் போராட்டம் வேலைநிறுத்தமாக மாறும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஒக். 18**

**அதிபர், ஆசிரியர் சங்கங்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை அரசு எதிர்வரும் 21 ஆம் திகதிக்குள் வழங்கவேண்டும். தவறின், பாடசாலைகளை ஆரம்பித்தபின்னர், சட்டவிதிமுறைப்படி பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.**

தனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அதிபர், ஆசிரியர்கள் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எமது பிரச்சினைகளுக்கு அரசாங்கம் எந்தவித தீர்வையும் வழங்கவில்லை. போலியான பேச்சைநடத்துவது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்கியுள்ளதே தவிர, எந்தவொரு தீர்வையும் வழங்கவில்லை.

**அமைச்சர் வீரசேகர படிக்க வேண்டும்**

எமது போராட்டத்தை ஒரு பயங்கரவாதமாக சித்தரித்து முட்டாள்தனமான ஒரு பரப்புரையை அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் கூறியிருந்தார். இதன் மூலமாக அரசின் மனோநிலை என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். சரத் வீரசேகர, மக்கள் பாதுகாப்பு அமைச்சராக இருக்க வேண்டுமென்றால், முதலில் இலங்கையின் அரசமைப்பையும் அடிப்படை உரிமையை சட்டங்களையும் தொழிற்சாலைச் சட்டங்களையும் படித்துவிட்டு வரவேண்டும்.

**முட்டைவீசும் எம்.பி.**

அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க, வீதியில் ஆசிரியர்கள் தங்கினால் முட்டை, தக்காளி வீசி கலைக்க வேண்டிவரும் என்று கூறியிருந்தார். இது, இனவாதத்தை தோற்றுவிக்கின்ற செயற்பாடாகக் காணப்படுகின்றது.

**போராட்டத்தால்தான் தடுத்துநிறுத்த முடிந்தது**

சேர்.ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைவை, அதிபர், ஆசிரிய தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழகங்கள், மாணவ சமூகங்கள் என்பன இணைந்து தடுத்துநிறுத்தின. மாணவர்களுடைய இலவசக் கல்வியை பாதுகாக்கும் வகையில்தான் நாங்கள் போராட்டத்தை மேற்கொண்டுவருகின்றோம்.

ஆகவே தொழிற்சங்கங்களின் போராட்டத்தால்தான் இலவசக் கல்வியை தக்கவைக்க முடிந்தது. இந்த அரசு இராணுவக் கல்வியை உருவாக்கி கல்வியைத் தனியார்மயப்படுத்தி இலவசக் கல்விக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

**6 வீத ஒதுக்கீடு வேண்டும்**

அரசு மொத்த தேசிய வருமானத்தில் கல்விக்கு 2.80 சதவீதம்தான் ஒதுக்கியுள்ளது.

நாங்கள் கல்விக்கு ஆறு வீதம் நிதியொதுக்குமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

**பெற்றோரே! புரிந்துகொள்ளுங்கள்**

தரமான கல்வி இலங்கையில் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நாங்கள் கல்விக்கு 6 வீத நிதி ஒதுக்கீட்டைக் கோரிவருகிறோம்.

எனவே, இந்த போராட்டத்தின் நியாயப்பாடுகளை பெற்றோரும், சமூக நலன் விரும்பிகளும் விளங்கிக் கொள்ளுங்கள் - என்றார். (து-125)

# குடும்ப வன்முறையை தூண்டுகின்றது கசிப்பு

## மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஒக்.18

பூநகரி, முக்கொம்பன் கிராம அலுவலர் பிரிவில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமையால், குடும்ப வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்களால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட போதும், கொரோனாத் தொற்றைக் காரணங்காட்டி அவர்கள் கிராமத்துக்கு வருகை தருவதற்குப் பின்னடிக்கின்றனர்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, கசிப்பு உற்பத்தியில் பலர் ஈடுபடுகின்றனர். இவற்றுக்கு அடிமையானவர்களால், குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன. சில பெண்கள் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

எனவே முக்கொம்பன் கிராம அலுவலர் பிரிவில் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-13)



# கிணற்றில் இருந்து 1,529 ரவைகள் மீட்பு

முல்லைத்தீவு, ஒக்.18

முல்லைத்தீவு தீர்த்தக்கரையில் கிணறொன்றைத் துப்புரவு செய்யும்போது, அதிலிருந்து அதிகளவான துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

மக்கள் வழங்கிய தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த சிறப்பு அதிரடிப்படையினர், கிணற்றைச் சுத்தம் செய்பவர்களை தொடர்ச்சியாகத் துப்புரவு செய்யுமாறு கூறினர். சிறப்பு அதிரடிப்படையினரின் கண்காணிப்பில் கிணற்றில் இருந்து ஆயிரத்து 529 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. அவை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ-4,19)

# பாடசாலையில் தகரம் திருடியவர் கைது

கொடிகாமம், ஒக்.18

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவலடிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தகரம் திருடினார் என்ற சந்தேகத்தில் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாடசாலையில் உள்ள வாகனத் தரிப்பு கொட்டகைக்கு போடப்பட்டிருந்த தகரமே இவ்வாறு திருட்டுப் போயுள்ளது எனவும் இந்தத் தகரங்கள் 24ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளார். (ச- 27)



# குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி, ஒக்.18

சிறுவர் தினத்தை முன்னிட்டு போரில் உயிரிழந்த மாணவர்களின் நினைவாக கிளிநொச்சி மகா வித்தியாலய 2015 உயர்தர மாணவ அணியினரின் ஒழுங்குபடுத்தலில் குருதிக்கொடை முகாம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி எஸ். கருணதீபா, மருத்துவர்கள், கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் கணக்காளர் நவீன், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-6)



# பள்ளிவாசல் கட்டடம் திறப்பு

வவுனியா, ஒக்.18

வவுனியா வெண்கல செட்டிகுள பிரதேசத்துக்குட்பட்ட வாழவைத்த குளம் பகுதியிலுள்ள பள்ளிவாசல் காரியாலய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே மஸ்தானால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிவாசல் கட்டடம் மஸ்தான் எம்.பியின் நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ச-110)

# இலந்தைக்குளம் பாலத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

மன்னார், ஒக். 18

நானாட்டான் இலந்தைக்குளம் பாலத்தைச் சீரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

முருங்கன், வாழ்க்கை பெற்றான், கண்டல், சிறுகண்டல் போன்ற இடங்களிருந்து வெள்ள நானாட்டான் வீதியில் இருந்து ஆரம்பிக்கும் மடுக்கரை வீதியிலுள்ள மதகு வழியாக பாய்ந்து சென்று, நானாட்டான் இலந்தைக்குளம் தெற்கு வீதியை தாண்டி மல்வத்து ஓயா ஊடாக கடலில் கலக்கிறது.

குறித்த இலந்தைக்குளம் பகுதியில் பாலம் இல்லாமல் குழாய்கள் பொருத்தப்பட்டு இருப்பதால் மேல் இடங்களில் உருவாகும் வெள்ளம் வேகமாக வழிந்தோட முடியாமல் தேங்கி வயல் நிலங்களையும் வீட்டு வளவுகளையும் சேதப்படுத்துகிறது - என்றனர்.

இது தொடர்பில் மன்னார் நீர்ப்பாசனப் பணிப்பாளர் தெரிவிக்கையில், இது பிரதேசசபைக்குரிய வீதியாக இருப்பதால் பிரதேசசபையோடு கலந்துரையாட வேண்டும். குறித்த பகுதியில் பாலம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்- என்றார். (ஐ-213)


## நாகபூஷணி திருமண சேவை

Dr. MBBS, BSc, MSc Civil Engineers, BSc, MSc Software Engineers, CIMA, ACCA, MBA Accountants Bankers, Lawyers, BSc Seviors Teachers, SLAS, SLEAS, Govt Jobs, தனியார்துறையினர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்**
**021 222 9306, 077 138 7596, 071 9999 306**


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.09.1959

மறைவு 10.11.2019

### அமரர் சண்முகநாதன் கருணாகரன்
(கண்ணன் பத்தர்)

**திதி : திரயோதசி**

பூண்டபேர் அன்பால் பேணியெமைக் காத்து
வேண்டிய பணியாவும் விரும்பி எமக்கருளி
தூண்டு சுடராகி துணை புரிந்த அப்பாவே!
ஆண்டிரண்டாகியது அருவமென நீர்மாறி....

**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

குடும்பத்தினர்
தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.
077 444 3393

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 14 04 1957

மறைவு 14 10 2021

### அமரர் திருமதி நீலாதேவி தனேந்திரன்

யாழ் மாவட்ட தேசோதயத்தின் தலைவர், யாழ் மாநகர சபை உறுப்பினர், யாழ் பிரதேச செயலக ம்ாதர் கிராம அபிவிருத்தி சமாச த்லைவர் மற்றும் பல சமூக சேவை நிறுவனங்களின் தலைவராக விளங்கும், சிறந்த தலைமைத்துவத்தை தன்னகத்தே கொண்டு அமைதியாக ஆரவாரமின்றி மக்களுக்கு பல வழிகளிலும் சேவையினை ஆற்றிவரும் மகத்தான தலைவர் தனேந்திரம் ஐயா அவர்களின் அன்புத் துணைவியார் அமரர் திருமதி நீலாதேவி தனேந்திரன் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு துயரடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் தனேந்திரன் ஐயாவிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**Blue Grand Builders, Thirunelvely, Jaffna.**
**நிர்வாக இயக்குநர் மற்றும் இயக்குநர்கள், ஊழியர்கள், நண்பர்கள்.**

### மஹிந்தானந்தவுக்கு...

உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

விவசாய அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி இதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இந்த அரசுக்கு விவசாயிகள் தொடர்பில் எந்தக் கவலையும் இல்லை. இந்த அரசால் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடியாது - என்றார். (எ-இ)


## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:
**076 080 1748**


## திருத்தி வாசிக்கவும்

நேற்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையின் 10ஆம் பக்கத்தில் வெளிவந்த **வலி.கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி கிளை இல.18, பழைய வீதி கோப்பாய் தெற்கு புதிய கட்டட கூறுவிலை கோரல்** என்ற விளம்பரத்தின் இறுதிப் பகுதியை **"பொது முகாமையாளர், வலி.கிழக்கு தென் பகுதி. ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி"** என்ற முகவரிக்கு 05.11.2021 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும் என வாசிக்கவும்.

**நீர்வேலி,**
**16.10.2021**

**பொது முகாமையாளர்,**
**021 205 4814**

## மரண அறிவித்தல்



### திருமதி சோபிதமலர் உதயகுமாரன்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோபித மலர் உதயகுமாரன் 15.10.2021 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - வீரலட்சுமி தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்ற அழகரத்தினம் - இராயேஸ்வரி ஆகியோரின் மருமகளும், உதயகுமாரனின் அன்பு மனைவியும், தனுசனின் (நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) பாசமிகு தாயாரும், தெய்வமலர், தெய்வநேசன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிவமலர், காலஞ்சென்ற வசந்திமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், முத்துலிங்கம், சுந்தரேஸ்வரி (சுவிஸ்), சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும், இராசகுமாரன் - அன்னலட்சுமி, இன்பநாதன் - தனலட்சுமி, காலஞ்சென்ற செல்வக்குமரன், காலஞ்சென்ற விஜயலட்சுமி - யோஜெந்திரன், சந்திரகுமாரன்-ஜெனந்தினி, பகீரதன் - செல்வலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 921 7592**

## மரண அறிவித்தல்



### யோசப் மார்டீன் செல்வரத்தினம்

தேவாலய வீதி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி ETTLINGENனை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் மார்டீன் செல்வரத்தினம் அவர்கள் கடந்த (15.10.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் யோசப் - மரியம்மா.தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் - மரியம்மா தம்பதியரின் மருமகனும் பேர்லி ஜோய்ஸ்சின் அன்புக் கணவரும், நிசாந்தி, ஷிபோனி, சிப்போரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அல்பிரட், மார்கஸ், ஜெயந்த தர்சன ஆகியோரின் மாமனாரும், டேவிட், டேமியன், டெனிஸ், பென் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பேணார்ட் இம்மானுவல் (சிறாப்பர் துறைமுக அதிகாரசபை), றேமன்ட் (அரச மருந்தாளர்), சிறில் (டிப்போ அதிகாரி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) மற்றும் கிறிஸ்ரின் புஸ்பம், விக்ரோறியா பரிமளம், ப்றுனோ குணரத்தினம் (இளைப்பாறிய பொது முகாமையாளர்), லில்லி, சாள்ஸ் (இளைப்பாறிய ஊழியர் பெற்றோலிய கூட்டுத் தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வநாயகம் (கனடா), அன்ரன் (நெதர்லாந்து), ஸ்ரான்லி (கனடா), றெக்ஸ் (கனடா), றொபின்ஸ்ரன் (ஜேர்மனி), ஜெயமலர் (கனடா), ராஜேஸ்வரி, ஜெயவதி, ரஞ்சினி (பிரான்ஸ்), யேன்பெலி சிற்றா (பிரான்ஸ்).ஆகியோரின் மைத்துனரும், பிராங்கிளின், பெனிபெர் ஆகியோரின் தொட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**யோ. பு. குணரத்தினம் (021 224 0673)**
**ஜேர்மனி : 0049 724 314 313,**

### கோத்தாபயவின்...

மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதற்கு முன்னர் எந்தவொரு ஆட்சி காலத்திலும் வறுமை நிலை குறுகிய காலத்துக்குள் இவ்வாறு அதிகரிக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச அதன் பின்னர் நல்லாட்சி அரசாங்கம் என சகல ஆட்சி காலத்திலும் இலங்கையில் வறுமை நிலை 4.2 - 4.5 சதவீதமாகவே காணப்பட்டது. ஆனால் தற்போது இது 7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இலங்கை மத்திய வங்கியில் அந்நிய செலாவணி இருப்பு தற்போது எதிர்மறையாகக் காணப்படுகிறது. இலங்கை வரலாற்றில் இவ்வாறு இடம்பெறுவது இது முதலாவது சந்தர்ப்பமாகும்.

வெகுவிரைவில் பொருளாதாரம் முழுமையாக சரிவடையக் கூடிய நாடுகள் பட்டியலில் இலங்கை முதலாவது இடத்தில் உள்ளது என்று அரசின் பங்காளி கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். இந்த பட்டியலில் இலங்கை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆறாவது இடத்திலேயே காணப்பட்டது. தற்போது முதலாவது இடத்துக்கு வந்துள்ளது. முறையான வேலைத் திட்டங்கள் எவையும் இன்றி மக்களை நெருக்கடிகளுக்கு உள்ளாக்க வேண்டாம் என்று அரசை வலியுறுத்துகின்றோம் - என்றார். (எ-22)

### இரண்டு மாத...

வில் சிசு மயக்கமுற்றது என்று கூறப்படுகின்றது. அதையடுத்து உறவினர்கள் சிசுவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

போதனா மருத்துவமனையில் சிசுவுக்கு சிகிச்சை வழங்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி அதிகாலை 5.30 மணிளவில் சிசு உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போ்தனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

### கொரோனா...

முன்தினம் நடந்தவை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த 12 பேரில் 8 ஆண்களும், 4 பெண்களும் அடங்குகின்றனர். இரண்டு ஆண்கள், பெண் ஒருவர் என 3 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 484 ஆக உயர்ந்துள்ளது. (எ-22)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# குற்றமும் தண்டனையும்

**கோ**த்தாபய அரசு ஆட்சிக்கு வந்தபின்னர் முதன் முறையாக உருப்படியான ஒரு விடயம்பற்றி வாய் திறந்திருக்கின்றது. 'சிறுவர்கள் மீதான பாலியல் மற்றும் துர்நடத்தைகளுக்கு எதிரான வழக்குகளை இரண்டு மாதங்களுக்குள் முடிவுறுத்த வேண்டும்' என்று சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட உள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சொல்லியிருக்கின்றார். உண்மையில், அப்படியொரு திருத்தம் வருவது வரவேற்கக்கூடிய ஒன்றே.

என்னதான் வாய்கிழிய, 'தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமமானது' என்று நீட்டி முழக்கினாலும், நீதிமன்ற வழக்குகள் எல்லாமே ஆமைவேகத்தில் நகர்வதே வழக்கம். குறிப்பாக, சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பிலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பிடுவதற்கு சில வருடங்களாவது எடுக்கவே செய்கின்றது. அதுவரையும் பாதிக்கப்பட்ட சிறுவனோ அல்லது சிறுமியோ ஒவ்வொரு வழக்குத் தவணைக்கும் நீதிமன்றத்துக்கு ஏறி இறங்க வேண்டும். அதற்கிடையில் அவர்கள் சிறுவர்கள் என்ற வயதுக்கட்டுப்பாட்டையும் தாண்டி பதிம வயதுக்குள் நுழைந்திருப்பார்கள். தங்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிக்காக அவர்கள் ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்று அந்த அநீதி தொடர்பில் மீளமீள நினைவூட்டுதலைக்கூட இந்தச் சமூகம் அவமானத்துக்குரிய விடயமாகவே நோக்குகின்றது. நீதிகோருதல்கூட, அவமானத்துக்கான ஒன்றாக மாறிநிற்பதுவும் அவர்கள் சிறுவர் என்ற பராயத்தைக் கடந்து பதின்ம வயதுக்குள் நுழைந்த பின்னரும்கூட நீதிமன்ற வழக்குகள் அவர்களின் வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தத் தடையாக இருப்பதும் யதார்த்தத்தில் ஓர் அபத்தமான விடயமே.

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள், துர்நடத்தைகள், கொடுமைகள் என்பன தொடர்பான வழக்குகள் நீண்ட காலத்துக்கு இழுபடாமல் துரிதகதியில் அவற்றை முடிவுறுத்துதல் என்பது பல வகைகளில் ஆக்கபூர்வமான ஒன்றே. சொற்ப காலத்துக்குள்ளேயே வழக்குகள் முடிந்துவிட்டால் அதற்குப் பின்னர் தமக்கு நேர்ந்த அநீதிபற்றிய நினைவுகளை தூக்கியெறிந்துவிட்டு வாழ்வின் அடுத்த கட்டத்துக்குள் சிறுவர்கள் திடமோடு கால்பதிக்க முடியும். அதைவிட சிறுவர்கள் மீது கைவைத்தால் உடனடியாகவே தண்டனை கிடைத்து விடும் என்ற அச்சம், குற்றஞ்செய்ய நினைப்போரையும் ஒருகணம் யோசிக்க வைக்கும். அந்த எண்ணம் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்தைத் தவிர்க்கச் செய்யும். ஆகவே, வழக்குகள் துரிதமாக முடிவுறுத்தப்படுவதால் நீதியும் உடனடியாகக்கிடைத்துவிடும். அதேநேரம் புதிய குற்றவாளிகள் உருவாகுவதும் தடுக்கப்படும். எத்தனையோ முட்டாள்தனமான முடிவுகளை எடுத்துவரும் கோத்தாபய அரசு அதிசயிக்கத்தக்க வகையில் முதன்முதலாக இந்த ஆரோக்கியமான விடயத்தைக் கையிலெடுத்திருக்கின்றது. அதைவெறும் பேச்சு நிலையிலேயே தொடராமல் விரைவிலேயே நடைமுறைக்குக் கொண்டுவந்து , சிறுவர்கள் மீதான துஷ்பிரயோக வழக்குகளை துரிதமாக முடிக்கும் காலத்தை உருவாக்க வேண்டும்.

சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான வழக்குகளை இருமாதங்களுக்குள் முடிவுறுத்துவது தொடர்பான சட்டத்திருத்தம்பற்றி அரசு ஆலோசிக்கும் செய்தி வந்த அதேசமயத்தில் முல்லைத்தீவில் மூன்று சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அந்தச் சிறுமிகளுக்கான நீதியும் வழமைபோன்று தாமதப்படுத்தப்படாமல் குற்றம்புரிந்தவர்கள் தண்டனையை விரைந்து அனுபவிக்க அரசு ஆவன செய்யுமா?.




# குறைந்தது தொற்றாளர் தொகை: 30 சிகிச்சை நிலையங்கள் நீக்கம்

**கொழும்பு, ஒக். 18**

**நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், கொரோனா சிகிச்சை நிலையங்களை படிப்படியாக குறைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இதன் படி, 30 சிகிச்சை மையங்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளன.**

சுகாதார அமைச்சின் கொரோனா சம்பந்தமான பிரதான இணைப்பாளரும், சுகாதாரசேவைகள் தொழில் நுட்பப் பிரிவின் பணிப்பாளருமான மருத்துவர் அன்வர் ஹம்தானி இதைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால், படிப்படியாக மீதமுள்ள சிகிச்சை நிலையங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள சிகிச்சை நிலையங்களிலுள்ள 34 ஆயிரத்து 7 படுக்கைகளில், 19 ஆயிரத்து 660 படுக்கைகள் இதுவரை நீக்கப்பட்டுள் ளன. சுமார் நாற்பது சதவீத படுக்கைகள் இப்போது வெறுமையாக உள்ளன.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை வியத்தகு அளவில் குறைந்துவிட்டது. நாடும் கொவிட் வைரஸ் சிவப்பு மண்டலத்தில் இருந்து பசுமை மண்டலத்துக்கு நகர்ந்துள்ளது. எனினும், தற்போதைய நிலையை பராமரிக்காவிட்டால், அது விரைவில் சிவப்பு மண்டலத்துக்கு மாறிவிடும்.

நாட்டை பராமரிக்க சில சுகாதாரச் சட்டங்கள் தளர்த்தப்பட்டாலும், மக்கள் அடிப்படை சுகாதாரச் சட்டங்களை தொடர்ந்து கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

பொலிஸாருக்கு எதிரான

# குற்றப்பத்திரிகைகள் இரத்துச் செய்யப்படும்!

## அமைச்சரின் கருத்தால் அதிர்வலை

கொழும்பு, ஒக். 18

பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகைகளை ஆறு மாத காலத்துக்குள் முடிக்கத் தவறினால், அது இரத்துச் செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தங்கள் கடமையைச் செய்த தற்காக பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மனித உரிமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்தகைய பொலிஸ் அதிகாரிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசிய அமைச்சர் சரத் வீரசேகர, பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளன என்றும் -ஆகவே இந்த விடயத்தில் தீர்வுகாண அமைச்சின்



செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் இணைந்து ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் சரத் வீரசேகர குறிப்பிட்டார். இதே வேளை, பொலிஸாரால் சித்திரவதைகளை அனுபவித்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பதிலாக குற்றச்சாட்டை எதிர்கொண்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற அமைச்சரின் கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது- என்றார். (த-இ)

# தமிழ்ச் சைவப்பேரவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.18

**விஜயதசமி நன்னாளில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ச் சைவப் பேரவை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.**



சைவ பரிபாலன சபையின் விசேட கூட்டத்தில், நல்லூர் சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள் ஆசியுரையுடன் பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அகில இலங்கை ரீதியாக 5 சிவ பிராந்தியங்களை உள்ளடக்கிய ரீதியில் தேர்வு செய்யப்பட்ட பேரவையின் முதலாவது செயற்குழு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

குரு முதல்வர்களாக நல்லை, தென்கயிலை, மெய்கண்டார், சிவகுரு ஆதீன முதல்வர்கள் நால்வரும் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

சிவஸ்ரீ பாலகைலாசநாதக் குருக்கள், சிவஸ்ரீ கிருபானந்தக் குருக்கள், சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள், சிவஸ்ரீ கி.உருத்திரபுரீஸ்வரக் குருக்கள், சிவத்திரு ஆறு. திருமுருகன் ஆகியோர் போஷகர்களாக முன்மொழியப்பட்டனர்.

தலைவராக முன்னாள் நீதிபதி சிவத்திரு. சி.வசந்தசேனன், பிரதித் தலைவராக முன்னாள் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், பொதுச் செயலாளராக மருத்துவர் தி. சுதர்மன், பொருளாளராக த. சிவரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் கிழக்கு, வன்னி, யாழ்ப்பாணம், மலையக, தென்மேல் சிவப்பிராந்தியங்களிலிருந்து 5 உபதலைவர்கள் அறிவிக்கப்பட்டனர்.

இணைச் செயலாளர்கள், பத்திராதிபர், நிர்வாக உறுப்பினர்கள் என 35 பேர் கொண்ட அனைத்து சிவப் பிராந்தியங்களையும், பழமை மிக்க சைவ அமைப்புக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்வு செய்யப்பட்ட செயற்குழு, பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அகில இலங்கை ரீதியான சைவ உயர் பீடத்தை உருவாக்கும் முயற்சியின் ஆரம்பமாக, இந்தப் பேரவை உருவாக்கம் கருதப்படுகின்றது. இந்த தமிழ்ச் சைவப் பேரவை தன்னுடைய முதல் பணியாக திருக்கோவில்களுக்கான பொதுஒழுங்குவிதிகளை வெளியிட்டுள்ளது. (4-125)



## முறையற்ற வீதிப்புனரமைப்பு: பிரதிநிதிகள் நேரில் ஆராய்வு

கொழும்பு,ஒக.18

முறையற்ற விதத்தில் மானிப்பாய் -காரைநகர் வீதி புனரமைப்பக்கப்பட்டு வரும் நிலையில், தற்போதையகள நிலவரத்தை மக்கள் பிரதிநிதிகள் நேரில் சென்று ஆராய்ந்தனர்.

குறித்த வீதி துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் நிலையில், வீதியிலுள்ள பாலங்கள் முறையான கட்டுமானமின்றி வெள்ளப்பாதிப்பு ஏற்படும் விதத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தை அறிந்த வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களும் நேரில் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இதனையடுத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தலைமையிலான குழுவினரும் நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்தனர். (4-125)

## மானிப்பாய் வீதி விவகாரம் நெடுஞ்சாலை அமைச்சுக்கு

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

மானிப்பாய்,ஒக்.18

மானிப்பாய் -காரைநகர் வீதியில் முறையான வீதத்தில் சீரமைக்கப்படாதவிடத்து, இந்த விவகாரத்தை நெடுஞ்சாலை அமைச்சுக்குத் தெரியப்படுத்தி, முறையான கட்டுமானங்களுடன் வீதிபுனரமைக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

வீதிபுனரமைப்புத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் ஆராய்ந்தார். அங்கு மக்கள் மற்றும் வீதிபுனரமைப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், குறித்த வீதியின் சில இடங்களில் பழமையான வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் வெள்ளம் தேங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் குறித்த வீதியைப் புனரமைக்கும் பொறியியலாளரிடம் கேட்டபோது. தற்காலிகமாக வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளன. வீதியை அகலிப்பதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதன் பின்னர் வாய்க்கால்கள் அமைக்கப்படும் என்றார். வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வாய்க்கால்கள் அமைக்கப்படாவிட்டால், நெடுஞ்சாலைகள் அமைச்சருக்குத் தெரியப்படுத்தி, வாய்க்கால்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றார். (ஒ-4-319)

கடந்த வருட போகத்தில்

## எஞ்சிய மானிய உரங்களை விவசாயிகளுக்கு பகிருங்கள்

*கைதடி கமநல சேவைகள் நிலையத்திடம் கமக்காரர்கள் கோரிக்கை*

சாவகச்சேரி, ஒக். 18

கைதடி கமநல சேவைகள் நிலையத்துக்கு கடந்த வருடம் காலபோக நெற்செய்கைக்கு கொண்டு வரப்பட்ட எஞ்சிய மானிய உர வகைகளை இந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்வோருக்கு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என்று கமக்காரர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இந்த வருடத்துக்கான உரவகைகள் வழங்குவது நிறுத்தப்பட்டதால் விவசாயிகள் தனியார் கடைகளில் அந்தர் 5 ஆயிரம் ரூபாவுக்கு ஒரு அந்தர் உரத்தை வாங்கி வயல் களுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

உரவகைகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ள நிலையில், கமநல சேவைகள் நிலையத்தில் ஆயிரத்து 300 ரூபா விற்பனை செய்யப்பட்ட யூரியா உரம் தனியார் வர்த்தக நிலையங்களில் 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையில் 12 கமக்கார அமைப்புக்களை உள்ளடக்கிய கைதடி கமநல சேவைகள் நிலைய களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த உர வகைகளை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கவும் என்றனர்.

இது தொடர்பாக கமநல சேவைகள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது. 'நிலையத்தில் விதை நெல் வாங்கிய விவசாயிகளுக்கு களஞ்சியத்தில் காணப்பட்ட உர வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

## பதவி விலகினார் சபை உறுப்பினர்

மானிப்பாய்,ஒக்.18

வீதிப்புனரமைப்பில் அதிருப்தி அடைந்ததால், வலி. தென்மேற்கு பிரதேச சபையின் சண்டிலிப்பாய் பிரதேச உறுப்பினர் லோ.ரமணன், கட்டடக்குழு உறுப்பினர் பதவியை விட்டு விலகியுள்ளார். வலி.தென்மேற் குப் பிரதேச சபையின் 43 ஆவது அமர்வில் அவர் இதனை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்டடங்கள் வீடமைப்புக் குழுவிலிருந்து, மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு திருப்திகரமான சேவையை வழங்க, பிரதேச சபையின் நிர்வாகம் ஒத்துழைக்கவில்லை. மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற கட்டட வேலைக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குமாறு, சபையின் மாதக் கூட்டத்தில் தெளிவாகக்கூறியும் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. அதேபோன்று புனரமைக்கப்பட்டுவரும் மானிப்பாய் வீதியில் பாலங்கள், புதிய வாய்க்கால்கள் அமைக்கப்படவில்லை. வெள்ளம் ஓடுகின்ற பழைய வாய்க்கால்கள், கிரவல் மண் கொண்டு முழுமையாக நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்பில் முறையிட்ட போதும் திருப்திகரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வில்லை.

எனவே முறையாக வீதி புனரமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, வீடமைப்புக் கட்டடக்குழுப் பதவியைத் துறக்கின்றேன்-என்றுள்ளது.(ஒ-4-319)

## மானிப்பாய் வீதி புனரமைப்பில் பிரதேச செயலகங்கள் அசமந்தம்

மானிப்பாய்- காரைநகர் வீதி புனரமைப்புத் தொடர்பில்,சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்கள் அசமந்தமாகவுள்ளன என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களிடம் வீதி அகலிப்புக்காக எல்லை மதில்களை அகற்றுவதற்கான சம்மதக்கடிதங்களை, மூன்று மாதத்துக்கு முன்னர் வழங்கியும், அவை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதித்திட்டப் பொறியியலாளர் குணநேசன் தெரிவிக்கையில்,

குறித்த சம்மதக்கடிதங்கள் கிடைக்கும் பட்சத்தில் ஒரு சில வாரங்களில் மதில்களை அப்புறப்படுத்தி, அகலிப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறித்த வீதியில் நூற்றுக்கு மேற்பட்ட பாலங்கள், கால்வாய்கள் உள்ளன. இவற்றில் புதிதாக அமைக்கப்பட்ட பாலங்கள் தவிர ஏனைய அனைத்துப் பாலங்களும் புதிதாக அமைக்கப்பட்டே காப்பெற் இடும் பணிகள் இடம் பெறும்- என்றார். (4-319)



# இன்றைய நாள்

**மேடம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வை பாராட்டுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள்.

**இடபம்**: சம்பள உயர்வு பற்றிய தகவல் வரலாம். உற்சாகமான நாள். மகிழ்ச்சி கூடும். நினைத்த விஷயம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். மனதில் பல காலம் கனவு கண்ட தேவை ஒன்று நிறைவேறும்.

**மிதுனம்**: அத்தியாவசியப் பொருள் ஒன்றின் சேர்க்கை உண்டு. மன உறுத்தல் நீங்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும் நாள்.

**கடகம்**: பயன் தராத பொருட்களை வாங்கி விரயம் செய்ய வேண்டாம். ஒவ்வாத உணவால் உடல் நலம் குன்றாமல் கவனமாக இருங்கள். யாரையும் குறைவாகப் பேசி அதன் மூலம் சிரமப்பட வேண்டாம்.

**சிம்மம்**: மகிழ்ச்சிகரமான அலைச்சல் அதிகரிக்கும். கோபம் குறையும். மனதுக்குப் பிடித்தவர்களின் சந்திப்புக் கிடைத்து மகிழும் நாள். பாராட்டு கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும்.

**கன்னி**: நீங்கள் விரும்பியது நடைபெறுவதற்கான அடையாளம் தெரியும். வீட்டில் கலகலப்பு கூடும். நீங்கள் விரும்பிய முன்னேற்றம் உண்டு. உறவினரைச் சந்தித்து பேசுவீர்கள்.

**துலாம்**: மனதில் நினைத்த காரியம் இனிதே வெற்றி பெறும். பயமும் கவலையும் தீர்வதால் மகிழ்ச்சி அடைவீர்கள். இளைஞர்கள் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**: மகிழ்ச்சி தரும் செலவுகள் திடீரென அதிகரிக்கலாம். வரன் தேடும் சலிப்பு நீங்கும். சந்திப்பு ஒன்று சந்தோஷம் தரும். நிம்மதி பிறக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**தனுசு**: நண்பர் ஒருவர் செய்யும் நன்மையால் மனம் நெகிழும். பணி மாற எடுத்த முயற்சி தாமதத்துக்குப் பிறகு பலன் தரும். சகோதரர்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**: மகிழ்ச்சியான நாள். எதிலும் அதிக கவனம் தேவை. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. நட்பு வட்டம் விரியும். நட்பால் நன்மை கிட்டும். இனிய சம்பவம் நடைபெறும்.

**கும்பம்**: வியாபார விருத்தி உண்டு. இளைஞர்கள் முன்னேறுவர். சகபணியாளர் ஒருவர் உதவிக்கரம் நீட்டுவதால் சிரமம் நீங்கும்.

**மீனம்**: எதிர்கால நன்மையை உத்தேசித்து எடுத்த முயற்சி வெற்றி தரும். நண்பர்கள், உறவினர்களோடு ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். இரண்டு விதமான வருமானங்கள் வரும்.

# கேரளாவில் கனமழை 11 பேர் இதுவரை பலி!

## 22 பேரை தேடும் பணி தொடர்கிறது

**கேரளா, ஒக்.18**

**கேரளாவில் கனமழை பெய்து வரும் நிலையில் நிலச்சரிவு ஏற்பட்டு 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.**



தென்கிழக்கு அரபிக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியதால், கேரளாவில் பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு போக்குவரத்தும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கோட்டயம் மற்றும் இடுக்கி மாவட்டங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணி உடனடியாக இடம்பெற்றாலும் இன்னமும் 22 பேரை காணவில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அங்கு கடற்படை மற்றும் இராணுவத்தினர் இணைந்து மண்ணில் புதையுண்டோரை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஆந்திராவில் 'அடிதடி உற்சவம்' நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம்

ஆந்திரா, ஒக். 18

ஆந்திராவில் நடைபெற்ற தசரா உற்சவத்தின் நிறைவு நாளில் கிராம மக்கள் ஒருவருக்கொருவர் உருட்டுக் கட்டையால் தாக்கிக் கொள்ளும் உற்சவம் இடம்பெற்றுள்ளது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ள நிலையில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் தசரா உற்சவத்தின் நிறைவு நாளில் 'பண்ணி உற்சவம்' நடத்தப்படுகிறது. உற்சவத்தின்போது தாயாரை ஒரு பிரிவினரும் சுவாமியை மற்றொரு பிரிவினரும் மலையிலிருந்து கீழே எடுத்து வருவர்.

இறுதியில் உற்சவ மூர்த்திகளை கைப்பற்ற இரு கிராம மக்களும் முயற்சி செய்வார்கள். அப்போது உருட்டுக்கட்டைகளால் ஒருவருக்கொருவர் தாக்கிக்கொள்வர். இதே வேளை இந்த உற்சவத்துக்கு பொலிஸார் தடை விதித்துள்ள நிலையில் தடையை மீறி கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த உற்சவத்தை நடத்தி தாக்கி கொண்டுள்ளனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் மண்டை உடைந்து படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# மன்மோகன் சிங் நலம்

சென்னை, ஒக்.18



முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது எனவும், அவர் அபாயக் கட்டத்தை தாண்டிவிட்டார் எனவும் எய்ம்ஸ் மருத்துவமனை தெரிவித்துள்ளது. முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் காய்ச்சல் மற்றும் உடல் சோர்வு காரணமாக கடந்த 13 ஆம் திகதி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் அவருக்கு டெங்குக் காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

எனினும் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையால் உடலில் குருதித் தட்டுக்கள் எண்ணிக்கை அதிகரித்து உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுகிறது எனவும் எய்ம்ஸ் மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# ஹைதராபாத்தில் ஒரு கப் தேநீர் 1000/=

ஹைதராபாத் ஹோட்டல் ஒன்றில் ஒரு கப் தேநீர் 1000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவது அனைவரையும் வியப் பில் ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ஹோட்டலின் உரிமையாளர் கூறும்போது, அசாமில் 'கோல்டன் டிப்ஸ் பிளாக் டீ' எனும் தேநீர் தூள் ஏலம் விடப்பட்டது.

இதனைஒரு கிலோ ரூ.75 ஆயிரத்துக்கு நாங்கள் ஏலத்தில் எடுத்தோம். மிகவும் அரிதான, உயர்வகை தேயிலை இது. இதனால் இந்த தூள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கப் தேநீரை ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்கிறோம். இதனை ருசித்தவர்கள் மிகவும் நன்றாக இருப்பதாகக் கூறுகின்றனர் - என்றார். (ச)

# தடுப்பூசி குறித்து விழிப்புணர்வுப் பாடல்

## மத்திய அரசு வெளியீடு


புதுடில்லி, ஒக்.18

தடுப்பூசி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பாடலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் நூறு கோடித் தடுப்பூசிகள் என்னும் இலக்கை எட்ட உள்ள நிலையில் இந்தப் பாடலை மத்திய நலவாழ்வுத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ளார்.

இந்தப் பாடல் கொரோனாத் தடுப்பூசி பற்றி மக்களிடம் உள்ள தவறான கருத்துக்களையும், தயக்கத்தையும் அகற்ற வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

ஸ்ரான்லி ஜொனி



# ஆப்கான் வாபஸில் இருந்து 'அக்யூஸ்'வரை உருப்பெறத்தொடங்கும் பைடன் கோட்பாடு

கடந்த ஜூலை மாத முற்பகுதியில் ஆப்கானிஸ்தானில் இருந்து துருப்புக்களை வாபஸ் பெறுவதை அமெரிக்கா துரிதப்படுத்திக் கொண்டிருந்தபோது ஜனாதிபதி ஜோ பைடன் 'அமெரிக்கா, ஆப்கானிஸ்தானுக்கு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு போகவில்லை' என்று சொன்னார். அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் அதன் மூலோபாய இலக்குகளை (ஒசாமா பின்லேடனை நீதியின் முன் நிறுத்துவதும் அல் குவைதா வலையமைப்புக்களை சீர்குலைப்பதும்) அடைந்து விட்டது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் துருப்புகளின் இறுதி நாளான ஓகஸ்ட் 31ஆம் திகதியன்று பைடன் இன்னொரு அறிக்கையை வெளியிட்டு, தலிபான்களின் விரைவான வெற்றிக்கு வழிவகுத்த படை வாபஸை நியாயப்படுத்தினார். அமெரிக்கத் துருப்புக்களை காலவரையறையின்றி ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து வைத்திருப்பது அமெரிக்காவின் தேசிய நலன்களுக்கு உதவாது என்றும் அவர் வாதிட்டார். பைடனின் நிலைப்பாட்டின்படி மற்றைய நாடுகளை மாற்றியமைக்க இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் யுகம் முடிவுக்கு வந்துவிட்டது.

**நடைமுறைச் சாத்திய யதார்த்தவாதம்**

வெளிவிவகாரக் கொள்கையில் பல தசாப்த கால அனுபவத்தைக்கொண்ட பழம்பெரும் ஜனநாயக கட்சிக்காரரரான பைடன் ஆட்சி மாற்றங்களைச் செய்வதற்காக அமெரிக்கா முன்னெடுத்த போர்களின் ஒரு ஆதரவாளராக இருந்து வந்திருக்கிறார்.

ஒரு செனட்டர் என்ற வகையில் பைடன் 2003ஆம் ஆண்டு ஈராக் படையெடுப்புக்கு ஆதரவாக வாக்களித்தார். 2011ஆம் ஆண்டு லிபியா மீது படையெடுத்த ஒபாமா நிர்வாகத்தில் அவர் துணை ஜனாதிபதியாக இருந்தார். ஆனால், இப்போது பைடன் தனக்கு முன்னர் பதவியில் இருந்த ஜனாதிபதிகளின் தாராள சர்வதேசியவாதத்தில் இருந்து தன்னை தூரவிலக்குகின்றார். அதாவது ஒரு வகையில் அவர் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின்



மூலோபாயத் தயக்கப்போக்கை பின்பற்றுகிறார். பல தசாப்தங்களில் புதிய போர் ஒன்றை ஆரம்பிக்காத முதல் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பேயாவார். அவர்தான் சீனா மீது வாணிப வரிகளை விதித்து பதற்றநிலையைத் தோற்றுவித்தவர். அத்துடன் அவர்தான் தலிபான்களுடன் பேச்சு நடத்தி படைவிலகல் இணக்கப்பாட்டை எட்டியவர். ட்ரம்ப் அமெரிக்காவின் தலையீட்டு போக்குகளை கட்டுப்படுத்தி வெளிவிவகாரக் கொள்கையை சீனா நோக்கி திருப்பிய அதேவேளை, அவரது அணுகுமுறை பெருமளவுக்கு முரண்பாடுகளுடனான கொடுக்கல் வாங்கலாக இருந்தது. காலநிலை மாற்றத்தைத் தவிர, பைடன் ட்ரம்பின் வெளிவிவகாரக் கொள்கை தீர்மானங்களில் வேறு ஒன்றையும் ரத்துச் செய்யவில்லை. மேலும் சரியாகக் கூறுவதானால், ட்ரம்ப் தொடங்கியதற்கு நடைமுறைச் சாத்தியமான யதார்த்தவாதத்தை அடிப்படையாகக்கொண்ட மூலோபாயக் கட்டமைப்பொன்றை பைடன் கொடுக்கின்றார் போலத்தோன்றுகிறது.

2001ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் 'பயங்கரவாதம் மீதான உலகளாவிய போரை' முன்னெடுத்தார். ஒபாமா அதைத் தொடர்ந்தார். மேற்காசியாவில் ஈரானின் வல்லாதிக்கம் மீது குறிவைப்பதற்கு ட்ரம்ப் அதைப் பயன்படுத்தினார். ஆனால், உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பது அமெரிக்காவின் பொறுப்பு என்று பைடன் நம்பவில்லை. 'ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் முக்கியமான தேசிய நலன் என்ன?' என்று அவர் ஓகஸ்ட் 30ஆம் திகதி கேட்டார்.

எனது அபிப்பிராயப்படி எமக்கு ஒரேயொரு நலன் தான் இருக்கிறது. எமது தாயகத்தின் மீது தாக்குதல் ஒன்றை தொடுப்பதற்கு மீண்டும் ஒருபோதும் ஆப்கானிஸ்தான் பயன்படுத்தப்பட முடியாமல் இருப்பதை உறுதிசெய்வதே அதுவாகும்'. உண்மையில், பைடனைப் பொறுத்தவரை, அமெரிக்க தாயகத்தின் மீது மேலும் தாக்குதல்களை தவிர்ப்பதன் மீது கவனத்தைக் குவித்த ஒரு போராக பயங்கரவாதம் மீதான போரை அவர் மீள வியாக்கியானப்படுத்துகின்றார். இந்த அணுகுமுறை ஏனைய மோதல் களங்களில் இருந்து (குறிப்பாக, முஸ்லிம் உலகில் இருந்து) அமெரிக்காவை பின்வாங்க அனுமதித்து சீனாவின் எழுச்சிக்கு எதிராக மூலவளங்களை குவிக்க உதவும்.

**அக்யூஸ் கூட்டணி**

ஆப்கானிஸ்தானில் இருந்து படைவிலகல் முடிவானது அமெரிக்க வல்லமை மீது நம்பகத்தன்மை தொடர்பான கேள்வியைக் கிளப்பியது. அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் அதன் நேச அணியை (காபூல் அரசாங்கத்தை) கைவிட்டுவிட்டது என்ற விமர்சனங்கள் கிளம்பின. ஆனால், பைடனின் புதிய யதார்த்த உலகில், ஆப்கான் அரசை ஆதரிப்பதோ அல்லது தலிபான்களை எதிர்த்து ஒரு முடிவின்றி சண்டையிடுவதோ அமெரிக்காவுக்கு தேசிய பாதுகாப்பு நோக்கத்தில் எந்த வகையிலும் உதவப் போவதில்லை. ஆனால், சீனாவைக் கையாளுவது அமெரிக்காவின் நலன்களுக்கு முக்கிய மானது. ஏனென்றால், வளர்ந்துவரும் சக்திமிக்க சீனா அமெரிக்காவின் உலகளாவிய முதன்மை நிலைக்கு ஒரு சவாலாக அமையும். சீனா ஏற்கனவே இந்தோ பசுபிக்கில் ஒரு மேலாதிக்க நிலையை நிறுவிவிட்டது. ஆப்கானிஸ்தானில் இருந்து படை விலகலை முடித்த கையோடு பைடன் நிர்வாகம் அதன் பேரார்வமிக்க புதிய கூட்டணியான 'ஒக்கஸை' அறிவித்தது.

**சவால்கள்**

பைடனின் கொள்கை அதன் முற்கட்டத்திலேயே இன்னமும் இருக்கிறது. அது ஏற்கெனவே பல சவால்களைச் சந்திக்கிறது. முதலாவதாக, அமெரிக்கா மாற்றுத் திட்டம் எதுவும் இல்லாமல் ஆசியப் பெருநிலப்பகுதியில் இருந்து விலகிக்கொள்கிறது. சீனா உட்பட தனது போட்டியாளர்களினால் நிரப்பப்படக்கூடிய வெற்றிடம் ஒன்றை விட்டுச் செல்கிறது. இதற்கு ஆப்கானிஸ்தானை உதாரணமாகச் சொல்லலாம். இரண்டாவதாக, பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவில்லை. காபூல் விமான நிலையத்தில் ஓகஸ்ட் 26ஆம் திகதி நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்பு இதைக் காட்டுகிறது. அதனால் தொடர்ந்தும் பாதுகாப்பு சவால்கள் இருக்கவே செய்யும். மூன்றாவதாக, ஈரானின் அணுப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்து நீடிக்கிறது. ஈரானை முன்னைய அணு உடன்படிக்கைக்கு திரும்பிச்செல்ல வைப்பதற்கு ஊக்குவிப்பு எதுவும் இப்போது இல்லை. நான்காவதாக, சீனா பொருளாதார ரீதியில் பெருமளவு செல்வாக்கை,



குறிப்பாக இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் கொண்டிருக்கிறது. அமெரிக்கா அக்யூஸின் ஊடாக அதன் பாதுகாப்பு பிரசன்னத்தையும் பற்றுறுதியையும் அதிகரிக்க முயற்சிக்கின்ற அதேவேளை, பிராந்தியத்தில் சீனாவுக்கு நிகராக பொருளாதாரச் செல்வாக்கை செலுத்த இயலாமல் இருக்கிறது அல்லது செலுத்த தயங்குகிறது. பசுபிக் வாணிப உடன்படிக்கையில் மீண்டும் இணைவதற்கு பைடன் நிர்வாகத்திடமிருந்து எந்த முயற்சியும் இல்லை. அந்த உடன்படிக்கையில் இணைந்து கொள்வதற்கு சீனா இப்போது நாட்டம் கொண்டிருக்கிறது.

இறுதியாக, அக்யூஸ் உடன்படிக்கை அத்திலாந்திக் கூட்டணிக்குள் விரிசல்களை தோற்றுவித்திருக்கிறது. அக்யூஸ் தொடர்பான கடுமையான முதல் பிரதிபலிப்பு சீனாவிடமிருந்து அல்ல, ஆஸ்திரேலியாவுக்கு டீசல் நீர்மூழ்கிகளை விநியோகிப்பதற்கு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த பிரான்ஸிடமிருந்தே வந்திருக்கிறது. அந்த உடன்படிக்கை இப்போது செயலிழந்துவிட்டது. தனக்கு முதுகில் குத்தப்பட்டுவிட்டதாக பிரான்ஸ் உணருகிறது. பைடன் ஏற்கனவே புதிய திசை மார்க்கத்துக்கும் பழைய யதார்த்தங்களுக்கும் இடையிலான ஒரு மோதலைக் காண்கிறார்.

(தி ஹிந்து)

சிவமயம்

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1957



மறைவு 14 . 10 . 2021

### திருமதி நீலாதேவி (லீலாதேவி) தனேந்திரன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலாதேவி (லீலாதேவி) தனேந்திரன் அவர்கள் கடந்த 14.10.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், நா.தனேந்திரன் (யாழ்.மாநகரசபை உறுப்பினர்) அவர்களின் அன்பு மனைவியும், லாவண்யா (இத்தாலி), துரிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், ரமேஸ் (இத்தாலி), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கௌசி, கிசாந்த், அதிஷ்ரா (இத்தாலி) மற்றும் டினுஷன், ஹரிஸ், ஜஸ்வின், மித்திரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் கமலாதேவி, விஜயலட்சுமி, புஸ்பராணி, காலஞ்சென்ற செல்வராணி மற்றும் உதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2021) திங்கட்கிழமை 65/2, சீனிவாசகம் வீதி, கொட்டடி இல்லத்தில் நடைபெற்று அஞ்சலியின் பின்னர் நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.தனேந்திரன் (கணவர்)
(யாழ். மாநகரசபை உறுப்பினர்)

தொடர்புகளுக்கு:
077 634 6252

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 01 . 1987



இறப்பு 16 . 10 . 2021

### செல்வி அனோஜா பற்றிக் செவேந்திரன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அனோஜா பற்றிக் செவேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2021) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் பற்றிக் செவேந்திரன்-லிண்டா பற்றிக் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், பிறிந்தா (London) பிரதீனா அவர்களின் அன்பு சகோதரியும், றிச்சட் நியுமன் (சுகந்தன் London), விஜயாளன் அவர்களின் அன்பு மைத்துனியும், சனன், ஒலிவர், சேலின், அவ்லின் ஆகியோரின் பாசமிகு சித்தியும் ஆவார்.

பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.00 - பிற்பகல் 4.00 Mahinda Funeral Parlour, No 591, Galle Road, Mount Lavinia பார்வைக்காக வைக்கப்படும். அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் திங்கட்கிழமை 18.10.2021 பிற்பகல் 4.00 மணிக்கு General Cemetery Mount Lavinia இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பற்றிக் (தந்தை) - 0094 776 18 1515
லிண்டா (தாய்) - 0094 740 308 903
சுகந்தன்(மைத்துனர் ) - 0044 787 397 4118

தகவல்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 18.06.1966 உதிர்வு 18.09.2021

### அமரர் சதா வேல்மாறன்

அமரருள் அருள் தந்த இறையினை இசைத்திட - நின்
சிறகது விரித்தனை - வித்தக
தலைவனே, தந்தையே, குருவே, கலைஞனே
பெரு மழைக் கண்ணீர், தினம், தினம் பொழிகின்றோம்.
உமக்கு நம் காணிக்கை முத்தென

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்வில் ஒளியேற்றிய
அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா
பேரானந்தப் பெரும் பேறெய்ய இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து இன்றைய அசாதாரண சூழ்நிலையிலும், நேரில் வந்தும் தொலைபேசி, பத்திரிகைகள் 'பனர்' விளம்பரங்கள் மூலமும் ஆறுதல் கூறிய உள்ளூர், வெளியூர் நண்பர்கள் வெளிநாடுகளில் அஞ்சலி நிகழ்வுகளை ஒழுங்கு செய்த அன்பர்கள், கலையுலக நண்பர்கள், மாணவர்கள், அன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட்களில் பல்வேறு வழிகளிலும் உதவிய வைத்தியசாலை ஊழியர்கள், மற்றும் யாழ் ப.நோ.சங்கத்தினர் இன்று வரை உடனிருந்து துயரில் பங்குபற்றி பல வழிகளிலும் உதவும் உறவினர்கள் அன்பர்கள் நிறைவாக பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்தே அமரரின் நினைவு மலரை தொகுத்து அழகுற வடிவமைத்து அமரருடனான தனது நெருக்கத்தை வெளிப்படுத்தியவரும், அமரரின் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரியவரான சிவஸ்ரீ சாம்பசிவக் குருக்கள் சோமாஸ்கந்த ஐயா அவர்களுக்கும், இம்மலர் முழுமை பெற தங்களின் அளப்பரிய பங்களிப்பை செய்த மிருதங்க வித்துவான் கே.கண்ணதாசன் அவர்தம் குழுவினர் ஆகியோருக்கும் எமது மனநிறைவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

82/4, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 221 7735, 074 099 5800

குடும்பத்தினர்.

# 6 ஆம் மாத நினைவலைகள்



மலர்வு 28 . 04 . 1954

உதிர்வு 25 . 04 . 2021

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் நவரெத்தினராசா சரஸ்வதி

அவர்களின் நீங்காத நினைவலைகள் நெஞ்சகலா திங்கள் ஆறு.....

காலங்கள் ஓடினாலும் கண்ணுக்குள்
- அம்மா நிதம் வந்தணைக்க விழிக்கின்றோம்...
கண்ணயர முடியாதாய் தாயே உன்
கோலமதே வந்தெம்மை துயர்துடைத்து போகிறது...

புலரும் பொழுதெலாம் மலரும் உருவமதாய் அம்மா
நீயருகிருந்து பேசுவது இன்னும் உறங்கலையே...

நெஞ்சத்துள் உறங்கும் எம்குலவிளக்கே
மூவிரண்டு திங்களென்ன எம்தாயே முக்காலப்
- பொழுதெல்லாம் உன் உணர்வாலே உயிர்வாழும் உறவனைத்தும்
உன் ஆத்மா சாந்தியுற இறையடியை இறைஞ்சுகிறோம்....

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-18 யும்மாபள்ளிவாசல் ஒழுங்கை ஆதன இல 16,16/1 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனப் பதிவேட்டில் மொகிடீன் பாலா மீரான் சாகிப் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு M.I.M. இயினுல்லா முகதாவில் 69ம் இலக்க 09.05.2005 திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் மொகமட் சனூன் மொகமட் நிஸ்தார் ஆதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.


**ஆதன விபரம்:-**
வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை கிழக்கு இறை பிரதேச செயலர் யாழ்ப்பாணம் ஆதன இல 16,16/1 யும்மா பள்ளி வாசல் ஒழுங்கை, வட்டாரம்-18 மாநகரசபை எல்லைக்குட்பட்ட "அணிஞ்சிலடி" 5.61 குளி கொண்ட ஆதனம். இது 07.04.2005 திகதியிட்டு 668 ஆம் இலக்கத்தில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.சுப்பிரமணியம் அவர்களால் அளந்து வரையப்பட்ட நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்டுள்ளது.

**எல்லைகள்:**
வடக்கு :- காதர் முஸ்தான் இன் ஆதனம்.
கிழக்கு :- சிவதர் தம்பிராசா இன் ஆதனம்.
தெற்கு :- T.குமாரசாமி இன் ஆதனம்.
மேற்கு :- யும்மா பள்ளிவாசல் வீதி. இதடங்கலும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது மொகமட் சனூன் மொகமட் நிஸ்தார் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மொகமட் சனூன் மொகமட் நிஸ்தார் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13.12.1947

உதிர்வு 29.10.2020

## பஞ்சலிங்கம் இரத்தினசபாபதி

ஓய்வு பெற்ற அதிபர்

ஆண்டு ஒன்று ஆகிவிட்டதே அப்பா
ஆறவில்லையே எங்கள் மனம்
அனு தினமும் உங்கள் நினைவுகள்
நோயுற்ற போது கூட உடனிருந்து
அறிவுரைகள் கூறுவீர்கள் அப்பா
அத்தனையும் பொன் மொழிகள்
மலைபோல் துன்பம் வந்த போதெல்லாம்
மௌனமாய் இருப்பீர்களே
நீங்கள் இல்லை என்றாலும் ஆத்மாவாக
இருந்து நாங்கள் வாழும் வரை வழி
நடத்துவீர்கள் அப்பா

K.K.S வீதி
இணுவில் மேற்கு,
இணுவில்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 15.03.1937

மறைவு 18.09.2021

கடந்த (18.09.2021) அன்று சிவபதமடைந்த

எமது குடும்பத்தலைவர்

## அமரர் வைத்திலிங்கம் பாலசிங்கம்

திதி: பூர்வபக்க திரியோதசி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்பவற்றை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் வைத்திலிங்கம் பாலசிங்கம் அவர்களின் 29 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (16.10.2021) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (18.10.2021) திங்கட்கிழமை 781, நாவலர் வீதி, யாழ்ப்பாண இல்லத்தில் சுகாதாரமுறைப்படி நடைபெறும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், முகநூல் மூலமும், மலர்வளையம் வைத்து அஞ்சலிசெலுத்தியவர்களுக்கும், நோயுற்றிருந்த காலத்தில் வைத்திய ஆலோசனைகளை வழங்கிய வைத்தியர்களுக்கும், விசேடமாக நேரடியாக குடும்பத் தலைவரை பல தடவைகள் பார்வையிட்டு வைத்திய சேவைகளை வழங்கிய வைத்தியர் இ.கஜன் அவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**781, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மனைவி மற்றும்**
**உறவினர்கள்.**

## சர்வதேசத்தை...

இவ்வாறு தெரிவித்துள்ளார் சுகாதார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய அரசியல் பிரச்சினைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு தான் தீர்வு வழங்கும். வெளிநாடுகள் ஒருபோதும் தீர்வை வழங்க முடியாது. எப்படியான தீர்வை வழங்க முடியும் என்பதை இறுதியில் அரசும், நாடாளுமன்றமும் தான் தீர்மானிக்கும். இதில் சர்வதேச சமூகம் தலையிட முடியாது.

புதிய அரசமைப்பு உள்ளிட்ட மக்கள் நலன்சார் கருமங்களை வெளிநாடுகளின் தலையீட்டுடன்தான் கொண்டுவர வேண்டும் என்று தமிழ்த் தரப்பினர் எண்ணக்கூடாது. அப்படி அவர்கள் நினைப்பார்களாக இருந்தால் அது அரசு வழங்கவிருக்கும் தீர்வில் தாக்கத்தைச் செலுத்தும். தீர்வை அடைய மேலும் பல காலங்கள் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சுயநலப்போக்குடன்தான் வெளிநாடுகள் செயற்படுகின்றன. இதனைத் தமிழ்த் தரப்பினர் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, தமிழ்த் தரப்பினர் தேவையற்ற போராட்டங்களை நிறுத்திவிட்டு எமது அரசுடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும். அதைவிடுத்து விலகி நின்றால் அது நாட்டின் நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் - என்றார். (எ-22)

## இந்திய...

வேண்டும் என்றும் இழுவைப் படகுத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

பதாதைகள், கொடிகளை ஏந்தியவாறு இந்தப் படகுகள் ஊர்வலம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இ.சாணக்கியன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்திய இழுவைப் படகுகளால் வடக்கு மீனவர்கள் நீண்டகாலமாக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்திய இழுவைப் படகுகளால் கடல் வளம் அழிவதுடன், வடக்கு மீனவர்களின் பெறுமதிமிக்க மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெறப்பட வேண்டும் என வடக்கு மீனவர்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருவதுடன், போராட்டங்களையும் நடத்தியிருந்தனர். ஆயினும் இந்தப் பிரச்சினை தொடர்பில் எவரும் காத்திரமான முன்னெடுப்புக்களைச் செய்யவில்லை. இந்திய இழுவைப் படகுகளின் தொடர் நெருக்கடிகளால் விரக்தியுற்ற பருத்தித்துறை மீனவர்கள், இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணாது எவரேனும் அரசியல்வாதிகள் வந்தால் அடித்து விரட்டுவோம் என்று பகிரங்கமாகக் கூறியிருந்தனர்.

இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் திடீரென போராட்ட அறிவிப்பு விடுக்கப்பட்டது. தனிப்பட்ட ரீதியில் திடீர் போராட்ட அறிவிப்பால் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் போராட்டம் நடைபெறுகின்றது என்று கூறப்பட்டது. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தங்களுக்கு இதுதொடர்பாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று தெரிவித்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், போராட்டம் தொடர்பில் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

வடக்கு மீனவர்களின் பிரச்சினை ஒரு சிலரால் அரசியல் நோக்கத்துடன் கையாளப்படுகின்றது என்று தெரிவித்த வடக்கு மீனவர் சங்கங்கள், இந்தப் போராட்டம் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்று கூறி, போராட்ட அழைப்பை நிராகரித்திருந்தன. ஏற்பாடுகளில் காணப்பட்ட குளறுபடிகளால் குறிப்பிட்ட அளவினருடனேயே போராட்டம் நடைபெற்றது. (எ-246,26,213)

## இந்தியாவுக்கு...

பாரதம் இலங்கைத் தமிழருக்கு உதவ வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியினர் இந்தியாவை கேட்பார்கள்?

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் புகுந்து மீன் பிடிப்பது வழமை. 15 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக மீனவர் உயிரைக் கையில் பிடித்தவாறு எல்லை தாண்டி வந்ததாலேயே, போராட்டமே தொடர்ந்தது. போராட்டக் காலத்தில் வடக்கின் மீது திணித்த பொருளாதாரத் தடைகளை முறியடிக்க உதவியவர் தமிழக மீனவரே.

நல்லாட்சிக் காலத்தில் எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கடுமையாக தண்டிக்கும் சட்டவரைபு ஒன்றை நாடாளுமன்றத்தில் சுமந்திரன் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி முன்மொழிந்திருந்தார். இரண்டாவது வாசிப்புவரை அந்தச் சட்ட வரைபு நாடாளுமன்றத்தில் வந்தது.

கடுமையான அந்த சட்ட வரைவு தொடர்பில் சித்தார்த்தனிடம் சொன்னேன். சுமந்திரனைக் கட்டுப்படுத்த முடியாதே என அவர் சொன்னார். மாவை சேனாதிராசாவிடம் சொன்னேன் அவ்வாறான ஒரு சட்டவரைபு நாடாளுமன்றத்தில் வந்ததா என மாவை.சேனாதிராசா என்னிடம் கேட்டார். நான் சட்ட வரைவின் வரிகளைக் காட்டினேன். தமிழரின் அரசியல் எதிர்காலத்துக்குத் தீங்காக அமையும் - என்றேன். அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் அந்தச் சட்ட வரைவை சுமந்திரன் முன்னெடுக்கவில்லை.

அதே சட்டவரைபை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து சட்டமாக்கினார். எல்லை தாண்டும் இந்திய மீனவரைச் சுட்டுக் கொல்வோம்- என்றார். அந்தச் சட்டத்தையே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைவிட்டுள்ளார் எனச் சுமந்திரன் முறையிடுகிறார்.

எந்த மீனவர் எம்மைக் காத்தார்களோ, எந்த நாடு எம்மவர் மூன்று இலட்சம் பேருக்குப் புகலிடம் கொடுத்துள்ளதோ, அந்த மீனவருக்கு அந்த நாட்டுக்கு எதிராகப் போராட்டக் களத்தில் தமிழரசுக் கட்சி இறங்கியிருக்கிறது. எந்த முகத்தோடு பாரதம் இலங்கைத் தமிழருக்கு உதவவேண்டும் எனத் தமிழரசுக் கட்சியினர் இந்தியாவைக் கேட்பார்கள்?

சுமந்திரனை அறிவோம். இந்தியாவுக்கு எதிரானவர் என்பதை அறிவோம். டில்லியில் என்னிடமும் மட்டக்களப்பு யோகேசுவரனிடமும் இதைக் கூறியவர் தமிழரல்லாத பாரதிய சனதாக் கட்சி மேலிடத்தார்.

சுமந்திரனை ஏன் இன்னமும் வைத்திருக்கிறீர்கள்? தமிழரசுக் கட்சி சார்பில் சென்னையில் தமிழக பாரதிய ஜனதாக் கட்சியைச் சந்தித்த சத்தியலிங்கத்திடமும் குகதாசனிடமும் கேட்டோர், தமிழக பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்கள்.

மாவை.சேனாதிராசாவையும், சிறீதரனையும், சாணக்கியனையும் அந்தப் பட்டியலில் இந்திய அரசியல்வாதிகளும் ஆட்சியாளரும் இன்று முதலாகச் சேர்த்துக் கொள்வர்- என்றுள்ளது. (எ-இ)

## இந்திய மீனவருக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் தெரிவித்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கண்டித்து முல்லைத்தீவு முதல் பருத்தித்துறை வரை நேற்று கடலில் போராட்டம் நடத்தப்பட்டது. அதில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை அரசின் மீன்பிடி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, இலங்கை சட்டத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தாத காரணத்தால், வடக்கு-கிழக்கில் வாழும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்களில் ஒரு சிலர் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை, மீன்பிடித்துறை அமைச்சர் பார்த்தும் பாராதது போன்று செயற்படுவதற்கு எதிராகவே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அமைச்சரின் இந்த அசமந்தச் செயற்பாடானது தமிழ் நாடு மற்றும் வடக்கு கிழக்கு வாழ் மீனவர்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்தும். அதனால் தமிழ்நாட்டு மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையிலான நல்லுறவு பாதிக்கப்படும்.

எனவே, மீன்பிடித்துறை அமைச்சர் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும்- என்றார். (எ-இ)

## குருநகர்...

ரானதா? அல்லது குருநகர் பகுதி மீனவர்களுக்கு எதிரானதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது

முல்லைத்தீவு தொடக்கம் பருத்தித்துறை வரையான றோலர் படகு மீன்பிடியைத் தடை செய்யக் கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று (நேற்று) இடம்பெற்றது.

இந்தப் போராட்டம் இலங்கையில் இடம்பெறும் உள்ளூர் இழுவைப் படகு மீன்பிடிக்கு எதிரானதா என்ற சந்தேகம் வலுவாகக் காணப்படுகின்றது. இந்த போராட்டத்தை நடத்தியவர்கள் குருநகர் பகுதி மீனவர்களுக்கு எந்தவிதமான அழைப்பும் விடுக்கப்படவில்லை. அதனால் நாங்கள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நாங்கள் கூற வேண்டிய விடயம் என்னவென்றால் இன்று நடைபெற்ற போராட்டம் இந்திய மீனவர்களுக்கு எதிரானதாக இருக்க வேண்டும். இந்தியக் கடற்படையினர் இலங்கை மீனவர்களை எல்லை தாண்டுவதற்கு அவர்கள் விடுவதில்லை. ஆனால் இந்திய மீனவர்கள் பொதுவாக எங்கள் கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுகின்றனர்.

நாங்கள் எங்கள் கடற்பரப்பில் சுதந்திரமான முறையில் மீன் பிடிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இன்று (நேற்று) நடத்தப்பட்ட போராட்டம் ஒரு கேள்விக் குறியான போராட்டமாகவே இருக்கிறது. நீங்கள் செய்த போராட்டம் எவருக்கான போராட்டம் என்பதை கூற வேண்டும்- என்றனர். (எ-25)

## விவசாயிகளின்...

காலை 9 மணிக்கு ஒன்று கூடி அரசுக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உரத் தட்டுப்பாட்டால் விவசாயிகள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அரசு இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே இன்று போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ-இ)

## சம்பள...

டிக்கை எடுப்பது கண்டனத்துக்குரியது என்று வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் தெரிவித்தது.

அரசின் இந்தத் தீர்மானத்துக்கு வடமாகாண அதிபர் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றது என்றும், இந்தத் தீர்மானம் கடந்த 16ஆம் திகதி சூம் செயலி ஊடாக நடந்த வடமாகாண அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்பில் அந்தச் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்காது எதிர்வரும் 21ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்க கல்வி அமைச்சு எடுத்த முடிவுக்கு எமது எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.

ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டங்களுக்கு வடமாகாண அதிபர்கள் சங்கம் தனது ஆதரவை வழங்கியமை எவரும் அறிந்ததே. தற்போது சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி நடத்தப்படும் போராட்டத்தில் நாமும் பங்கெடுப்பதுடன், எதிர்வரும் 21ஆம் திகதி நாடளாவிய ரீதியில் 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைத் திறப்பதற்கு எடுத்துள்ள முடிவுக்கு எமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கிய பின்னர் பாடசாலைகளை மீளத் திறக்கும் நடவடிக்கைக்கு நாம் உடன்படுகின்றோம்- என்றுள்ளது. (எ-159)

## விபத்தில்...

துள்ளான். சிறுவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

சிறுவன் செலுத்திய மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து, வீதியில் சைக்கிளில் பயணித்த ஒருவரை மோதி, வீதியில் பயணித்த பாரவூர்தி ஒன்றுடனும் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளான்.

இந்த விபத்து தொடர்பில் உலுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-110)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு
## கேள்வி அறிவித்தல் - 2022

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையான காலப் பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 18.10.2021 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 01.11.2021 பிற்பகல் 14.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி :- 2021.11.02 மு.ப 11.00 மணிவரை**
**கேள்வி திறக்கப்படும் திகதி :- 2021.11.02 மு.ப. 11.30 மணி**

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,500.00* | 61,000.00 | 6,050,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 17,000.00 | 1,637,350.00 |
| 3 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | *1,500.00* | 27,000.00 | 2,641,210.00 |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,500.00* | 6,000.00 | 572,000.00 |
| 5 | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 4,000.00 | 366,300.00 |
| 6 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,500.00* | 2,500.00 | 128,700.00 |
| 7 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,500.00* | 16,000.00 | 1,541,133.00 |
| 8 | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 7,000.00 | 638,000.00 |
| 9 | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,500.00* | 10,000.00 | 948,200.00 |
| 10 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 3,000.00 | 268,400.00 |
| 11 | மந்துவில் பொதுச்சந்தை | *1,500.00* | 2,000.00 | 53,900.00 |
| 12 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | *1,500.00* | 2,000.00 | 27,500.00 |
| 13 | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | *1,500.00* | 2,000.00 | 28,710.00 |
| 14 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை(இல-01) | *1,500.00* | 2,000.00 | 35,201.00 |
| 15 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை இல-02) | *1,500.00* | 2,000.00 | 35,201.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,500.00* | 2,000.00 | 73,150.00 |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 2,000.00 | 59,125.00 |
| 3 | முத்துஜயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 2,000.00 | 50,622.00 |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,500.00* | 3,000.00 | 335,500.00 |
| 5 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,500.00* | 2,500.00 | 188,100.00 |
| 6 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,500.00* | 5,000.00 | 421,630.00 |
| 7 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | *1,500.00* | 2,500.00 | 123,997.00 |
| 8 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-01) | *1,500.00* | 1,000.00 | 3,080.00 |
| 9 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-02) | *1,500.00* | 1,000.00 | 3,080.00 |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | *1,500.00* | 2,000.00 | 61,820.00 |
| 2 | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | *1,500.00* | 3,000.00 | 294,910.00 |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | *1,500.00* | 4,000.00 | 353,331.00 |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | *1,500.00* | 2,000.00 | 23,666.00 |
| 5 | மாங்குளம் கருவாட்டுக்கடை | *1,500.00* | 1,000.00 | 3,080.00 |

### நிபந்தனைகள்.

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் மூலப் பிரதியினை தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற கேள்வி முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.
02. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2021.11.08 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சமபங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
03. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
04. வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்படுத்தல் வேண்டும்.
05. பொதுச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றல் வேண்டும்.
06. புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்குப் பெற்றுக் கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் மாட்டிறைச்சிக் கடைக்கான குத்தகை கேள்விப் படிவமும், புதுக்குடியிருப்பு கோழியிறைச்சிக் கடையினை பெற்றுக்கொள்பவருக்கு மாத்திரம் மந்துவில் கோழியிறைச்சிக் கடைக்கான குத்தகைக் கேள்விப் பத்திரமும் வழங்கப்படும். எவ்வாறாயினும் புதுக்குடியிருப்பு மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக் கடைகளின் சித்தியாளர்களுக்கே மந்துவில் மாட்டிறைச்சிக்கடை, கோழியிறைச்சிக்கடை ஆகியவை வழங்கப்படும்.
07. பொதுச்சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருட்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணத்திற்கு மேலதிகமாக அறவிடமுடியாது. மீன், மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் (புதுக்குடியிருப்பு, விசுவமடு பொதுச்சந்தைகள் தவிர்ந்த) இடத்திற்கு ஒருநாளிற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 5.00ம் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள்.ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00ம் மற்றும் ஏனைய வாகனங்களுக்கு 20.00ம் அறவிடலாம். அதற்கு மேல்திகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
08. புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் (நாளொன்றிற்கு) பழக்கடை, வெற்றிலைக் கடைகளுக்கு ரூபா 100.00ற்கு மேற்படாமலும் மரக்கறிக் கடைகளுக்கு ரூபா 110.00ற்கு மேற்படாமலும், விசுவமடு சந்தைக் கடைகளுக்கு (நாளொன்றிற்கு) ரூபா 100.00ற்கு மேற்படாமலும் (இட வாடகையாக) அறவிடமுடியும்.
09. பொதுச் சந்தையில் மரக்கறி, கடலுணவு வகைகளின் கொள்விலை, விற்பனைவிலை என்பன காட்சிப்படுத்தல் வேண்டும்.
10. மரக்கறி, கடலுணவு மற்றும் இறைச்சிக்கடைகளில் அவற்றின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் வேண்டும்.
11. திருமுறிகண்டி பொது மலசலகூடத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேல் வரியோ அல்லது கட்டணமோ அறவிடக்கூடாது.(கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்)
12. இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
13. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது அரசாங்கதினால் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி, சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும், சபையினால் தீர்மானத்திற்கு அமைவாகவும் விற்பனை செய்தல் வேண்டும்.
14. இறைச்சிக்கடைகளை மற்றும் கருவாட்டுகடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடைவாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
15. கோழியிறைச்சிக்கடை குத்தகைக்காரர் ஊர்க்கோழிகள் உயிருடன் காட்சிப்படுத்தி உயிருடன் விற்பனை செய்தல் வேண்டும்.
16 கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்பட வேண்டும்.
17. சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு சந்தைக் குத்தகையாளர் எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.
18. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்பு நிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்தி பெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
19. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண், பெண் மாடுகள், ஆடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகள், ஆடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
20. சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும். பொது விதிகள் தவிர்ந்த விசே சலுகைகள் சபை தீர்மானத்திற்கு அமைவாகவே நடைமுறைப்படுத்தப்படும், தாங்கள் சட்டவரையறைகளுக்கும் சபைக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.
21. அரசினால், பிரதேச சபையினால் தொற்று நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
22. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக இல்லாது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**அ.தவகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

**2021.11.18.**
**தொலைபேசி இல:-0212290847/0212291023**
**email-pkipsmullai@gmail.com.**

# மூடி மறைக்காது தீர்வு காணுங்கள்

## வலியுறுத்துகிறது ஐ.ம.ச.

கொழும்பு, ஒக்.18

மிக நீண்டகாலமாக நிலவிவரும் அதிபர், ஆசிரியர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ஒரு சாதகமான தீர்வை முன்வைக்காது பாடசாலைகளை மீளத் திறப்பதற்கான தீர்மானத்தை அரசு எடுத்துள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் ரஜித கொடித்துவக்கு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு துர்ப்பாக்கிய நிலைமைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது. பிரதானமாக எதிர்வரும் 21ஆம் திகதி மட்டுப்படுத்தப்பட்டளவில் பாடசாலைகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்குமானால் அரசிடம் ஒன்றை நாம் கேட்க விளைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளாமல், பாடசாலைகளை மீளத் திறப்பதற்குத் தீர்மானித்திருந்தால் இந்தப் பிரச்சினை மீண்டும் இருந்த இடத்துக்கே செல்லும் என்பதை நாம் நினைவூட்ட விரும்புகின்றோம்.

சேவையிலுள்ள ஆசிரியர்களுக்குப் பதிலாக அரசு பயிற்சி பெற்ற ஆசிரியர்களை சேவைக்கு அமர்த்தி கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்திருந்தால் அது நாட்டின் கல்வி முறைமை இல்லை என்பதே எமது கருத்து.

அதேபோன்று அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்காது அதற்குப் பதிலாக சகல விடயங்களிலும் இராணுவத்தினரை உள்ளீர்ப்பதைப் போன்று ஆசிரியர்கள் இல்லாவிட்டால் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அழைத்து கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முயற்சித்தால் அது அரச நிர்வாகம் இல்லை என்றே கூற வேண்டும்.

பிரச்சினைகளை மூடிமறைப்பதற்கு முயற்சிக்காது பிரச்சினைகளைச் சரியாக இனங்கண்டு அதற்குத் தீர்வை பெற்றுக்கொடுக்கமாறு அரசைக் கோருகின்றோம் - என்றார். (எ-22)

# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் கசிப்புடன் நேற்று மாலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் மேற்கு பேச்சியம்மன் கோவிலை அண்டிய பகுதியில் ஒருவர் கசிப்பு உடைமையில் வைத்துள்ளார் என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 750 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

ஒரு வாரத்தில்

# ஹவுத்திப் படையினர் 700 பேர் படுகொலை!

சனா, ஒக். 18

**யேமனின் மரிப் நகருக்கான போரில் கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று வரை நடத்தப்பட்ட தாக்குதல்களில் 700க்கும் அதிகமான ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் என்று சவூதி கூட்டுப்படை தெரிவித்துள்ளது.**

யேமன் நாட்டில் அதிபர் மன்சூர் ஹாதி அரச படைகளுக்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இந்தப் போரில் சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக வான்வழியாகவும் தரை வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றன. யேமனின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள மரிப் மற்றும் ஷப்வா நகரங்களில் பல மாவட்டங்களை ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி வருகின்றனர். இதனால் அந்த நகரங்களில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ளது. இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

இந்த நிலையில், மரிப் நகரின் தெற்கே அபியா பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் 160 ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர் என்று சவுதி கூட்டுப் படை தெரிவித்துள்ளது. (ம)

# ஆசிரியர் சம்பள முரண்பாட்டை அரசியலாக்கியவர் கோத்தாபய

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.18

ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவிய பிரச்சினையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது அரசியல் தேவைக்காக அரசியல் மயப்படுத்தினார். ஆட்சிக்கு வருவதற்காக வழங்கிய வாக்குறுதியை தற்போது ஜனாதிபதி நிறைவேற்றவேண்டும். அதைவிடுத்து ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்தினரது போராட்டத்தை முடக்க முயற்சிப்பது முறையற்ற செயற்பாடாகும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

1997ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர், அதிபர் சேவையில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. இருப்பினும் எந்த அரசும் இந்தப் பிரச்சினையை அரசியல் தேவைக்காக பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தான் அரசியலாக்கினார். 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலிலும், 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும் ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படும் என அரசு குறிப்பிடுகிறது. அதை ஆசிரியர்கள், அதிபர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நம்பிக்கையான முறையில் வெளிப்படுத்த வேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள் மீது வெறுப்படைவது பயனற்றது. தொழிற்சங்கத்தினர் பெற்றோருடன் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்றார். (எ-இ)

20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 28.03.1951

விண்ணுலகில் 29.10.2001

**அமரர் ச.சற்குணானந்த ஸ்ரீஸ்கந்தராசா**

**(போட்டோ ஸ்ரீ)**

அன்பும் அமைதியும் பண்பெனக் கொண்டு
அகிலம் சிறந்திட அறவழி வாழ்ந்து
புகைப்படத் துறையில் காலடி பதித்து
புதுமையாய்ப் பல புனைவுகள் செய்து
பண்புள்ள ஆசானாய் பலரையும் ஆளாக்கி
பாரினில் அவர் வாழ பாதைகள் பல செய்து

அன்புடன் மனைவி அவருடன் பிள்ளைகள்
அழகாய் வாழ்ந்திட அருமையாய் வித்திட்டு
ஆருயிர் தனைவிட்டு அமைதியாய் ஆனீரோ
ஆயின ஆண்டுகள் இருபது ஆயினும்
ஆறாது என்றும் எம் துயர் ஐயா!

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.**

K.K.S வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்: மூவர் பலி!

இந்தோனேஷியாவில் நேற்றுமுன்தினம் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 அலகுகளாகப் பதிவானது.

இதுகுறித்து அமெரிக்கப் புவியியல் மையம் தரப்பில், 'இந்தோனேஷியாவின் பாலி தீவில் இன்று (கடந்த சனிக்கிழமை) மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.8 அலகுகளாகப் பதிவானது. இதன் ஆழம் 10 கி.மீ. பாலி தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலநடுக்க அதிர்வுகள் உணரப்பட்டன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் மூன்று பேர் இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தனர் என்று இந்தோனேஷிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ம)



ஸ்பெய்னின் லா பல்மா தீவில் உள்ள எரிமலை தொடர்ந்து வெடித்துக் கொண்டிருப்பதால் அதைச் சூழவுள்ள பகுதிகள் மிகமிக ஆபத்தான பகுதிகளாக மாறியுள்ளன. எரிமலையால் வெளியேற்றப்படும் கழிவுகளும் குழம்புகளும் நகர்ப்புறங்களை நோக்கி படையெடுக்கத் தொடங்கியுள்ளன. (ம)

# கந்தகார் குண்டுவெடிப்பு பொறுப்பேற்றது ஐ.எஸ்.!

காபூல், ஒக். 18

ஆப்கானிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள கந்தகாரில் மசூதியொன்றில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 100க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட நிலையில், அந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.



ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் ஆப்கானிஸ்தான் முழுமையாக வந்துள்ளது. தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அழிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர். அத்துடன் ஆப்கானிஸ்தானை எந்தவொரு நாட்டுக்கும் எதிராக பயங்கரவாத அமைப்புகள் பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்பதுதான் தலிபான்களுடன் செய்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா முன்வைத்த நிபந்தனையாகவும் உள்ளது. இதனால் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு தலிபான்களுக்கு எதிராகத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. அதன் ஒரு கட்டமாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

ரி-20 உலகக்கிண்ணத் தொடர்

# இந்தியாவைத் தோற்கடித்து எமது பயணம் ஆரம்பிக்கும்

## பாகிஸ்தானின் தலைவர் பாபர் அசாம் நம்பிக்கை



**டுபாய், ஒக். 18**

**ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியைத் தோற்கடித்து எமது வெற்றிப் பயணத்தைத் தொடங்குவோம் என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் தெரிவித்தார்.**

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார் பாபர் அசாம்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னைப் பொறுத்தவரை ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணியை விட பாகிஸ்தான் அணிதான் சற்று வலிமையாக, அதிகமான சாதக அம்சங்களுடன் இருக்கிறது என நம்புகிறேன். இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் ஒப்பிடும்போது, எங்களுடன் விளையாடும் இந்திய அணிதான் அதிகமான நெருக்கடியுடனும், அழுத்தத்துடனும் இருக்கும். இந்தியாவைத் தோற்கடித்து எங்கள் பயணத்தைத் தொடங்குவோம். ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்கும் போட்டி எப்போதும் பாகிஸ்தானுக்கு சாதகமாக இருக்கும். அங்கிருக்கும் ஆடுகளங்கள், மைதானம் பற்றி நன்கு தெரியும், பழகியிருக்கிறோம். எங்கள் சொந்த மைதானம்போல்தான் அதை உணர்ந்து விளையாடுவோம் - என்றார். (ம)

## ஆலோசகராக டோனி; அளவற்ற மகிழ்ச்சி!

கோலி வெளிப்படை



டுபாய், ஒக். 18

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணிக்கு டோனி ஆலோசகராக இருப்பது அளவற்ற மகிழ்ச்சி என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவரான கோலி.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அணியின் ஆலோசகராக எம்.எஸ். டோனி இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் மிகவும் அனுபவம் வாய்ந்த வீரர். அவர் ஆலோசகராக இருப்பது அணிக்கு கூடுதல் நம்பிக்கையை தரும். உத்வேகம் பெற்றவர்களாக நாம் உள்ளோம்- என்றார். (ம)

இந்திய அணியின்

## பயிற்சியாளராக ராகுல் ராவிட்!

புதுடில்லி, ஒக். 18

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ராகுல் ராவிட் நியமிக்கப்பட்டுள்ளார். ரி20 உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் ரவி சாஸ்திரியின் பதவிக்காலம் முடிவடைகின்றமையால் அவரின் இடத்துக்கு ராவிட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ரவி சாஸ்திரி செயற்பட்டு வருகின்றார். அவரின் பதவிக்காலம் ரி-20 உலகக்கிண்ணத்துடன் முடிவுக்கு வருகின்றது. பதவியை நீடித்துக் கொள்ள ரவிசாஸ்திரி உடன்படவில்லை. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் அவருடன் பெரியளவில் பேச்சை நடத்தவில்லை. புதிய பயிற்சியாளராக எவரை நியமிப்பது என்பது தொடர்பான தேடல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்திய 'ஏ' அணியினதும், 19 வயதுக்குட்பட்ட அணியினதும் பயிற்சியாளராகச் செயற்பட்ட ராவிட் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்படவுள்ளார். ராவிட்டும் இதற்குச் சம்மதித்துள்ளார். (ம)



# டோனி இல்லாமல் கொண்டாட்டம் இல்லை

## அவர் வரும்வரை காத்திருப்போம் சி.எஸ்.கே. நிர்வாகி தெரிவிப்பு



சென்னை, ஒக். 18

ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியனானமைக்கான வெற்றிக்கொண்டாட்டம் இப்போதில்லை. அவர் வரும்வரை காத்திருப்போம் என்று சென்னை சுப்பர் கிங்ஸின் மூத்த நிர்வாகி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அணித் தலைவர் டோனி, ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணிக்கு ஆலோசகராகச் செயற்படவுள்ளார். சி.எஸ்.கே. அணியின் தலைவர் டோனி இல்லாமல் வெற்றிக் கொண்டாட்டம் எதுவுமில்லை. இந்தியாவுக்கு டோனி வரும்வரை அனைவரும் மகிழ்ச்சியுடன் காத்திருப்போம். எம்.எஸ்.டி இல்லாமல் அணிக்குள் எந்தக் கொண்டாட்டமும் கிடையாது' - என்றார். (ம)

## டோனி தக்கவைப்பு

அடுத்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் சென்னை அணியின் முதலாவது வீரராக டோனி தக்கவைக்கப்பட்டார்.

சென்னை அணியுடன்தான் இருப்பேன் என்றும் அடுத்த வருடத்தில் தான் விளையாடு வது இந்தியக் கிரிக்கெட் சபையின் 'தக்கவைப்பு' திட்டத்தையும் சென்னை அணியின் நலனையும் கருத்திற்கொண்டு அமையும் என்று டோனி தெரிவித்திருந்த நிலையில், டோனியை முதலாவது வீரராகத் தக்கவைத்தது சென்னை சுப்பர் கிங்ஸ். (ம)


பெண்கள் பயன்படுத்தும் இருசக்கர வாகனம் விற்பனைக்கு

Wego No BGK, DIO BFG மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு.
தொடர்பு: 076 654 5987

விரைவு பொதிகள் சேவை

மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
Over 11Kg U.K - 975/=
"தற்போது அமெரிக்க லொத்தர் விசா பதியப்படுகிறது"
உள்நாடு - 24 மணித்தியாலத்திலும் வெளிநாடு - 72 மணித்தியாலத்திலும் ஒப்படைக்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது)
Lanka Cargo Worldwide Express
315, Kasthuriyar Road, Jaffna.
134, Adiyapatham Road, Thirunelvely.
076 2832 397

அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது
Closing Date 09.11.2021
அமெரிக்க லொத்தர் விசா
DV-2023
இன்றே உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு Passport அவசியம்
Thirumurugan Com Net
பொதிகள் சேவை
321, K.K.S. Road, Jaffna. 0777 554 528

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
☆ பத்திரிகை விநியோகிப்பவர் (Delivery Boy)
☆ துப்பரவு ஊழியர்
☆ உதவியாளர்
ஆர்வம் உள்ளவர்கள் 18.10.2021 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை நேரில் சமூகம் தரவும்.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.